நாட
788

# பாஞ்சாலங்குறிச்சி

அல்லது

# மண்வாசி

[நாடகம்]

எழுதியவர்

"மேகலை"

எல்லா உரிமையும்
எழுதியவருக்கே

விலை 0—12—0

… பெற்று ப… கலாம்.

# பாஞ்சாலங்குறிச்சி

அல்லது

# மண்வாசி

[நாடகம்]

எழுதியவர்

“மேகலை”

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.சு. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

எல்லா உரிமையும்
எழுதியவருக்கே

விலை 0—12—0

அனுமதி பெற்று யாரும் நடிக்கலாம்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 229
நன்கொடை எண்: 229

புரட்சிக் கவிஞரும், முத்தமிழ்ப் பெருமன்றத்தின்
செயலாளருமான புதுவை, உயர்திரு

# பாரதிதாசன்

## அவர்கள் தந்துதவிய சிறப்புரை.

"மேகலை" அவர்கள் இயற்றிய 'பாஞ்சாலங் குறிச்சி அல்லது மண்வாசி' என்ற நாடக நூலை ஊன்றிப் படித்தேன். வேண்டப்படும் கருத்துககள், நாடக அமைப்பில் ஓட்டம், உறுப்பினர் பேச்சுக்களில் மேன்மையும் துடிப்பும், இவை என்னுள்ளங் கவர்ந்தன. "மேகலை" அவர்கள் ஓர் சிறந்த நாடகப் புலவர்; வாழ்க!

புதுச்சேரி.
15—6—50

பாரதிதாசன்.

'ஹாஜிஜி' அச்சகம், ஆத்தூர், சேலம்.

# அறிமுகம்

ஒட்டப்பிடாரம் உலகம்மனின் சக்தியைக் குடத்தில் அடைத்து பாஞ்சாலங்குறிச்சியை வெல்ல முடியுமென்று முயற்சிகள் பல நடந்ததாகக் கதை கதையாக எம் திருநெல்வேலி ஜில்லாவில் சொல்வதுண்டு. அப்படிக் கண்டதையும் கேட்டதையும் வைத்து எழுதப்பட்டது தான் இந்தக்கற்பனை நாடகம். ஏழாண்டுகளுக்குமுன் எழுதப்பட்ட இந்நாடகம் இவ்வூரிலும்பல இடங்களிலும் நடிக்கப்பட்டு பல அறிஞர்களால் புகழப்பட்டது.

நான் எழுதியுள்ள முப்பது நாடகங்களில சில ஒற்றையங்க நாடகங்கள் திருச்சி நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்பட்டவை. மற்றப் பெரிய நாடகங்கள் ஆத்தூர் கலைத்தொண்டர் கழகத்தாராலும், மாணவர், மற்றையோராலும் நடிக்கப்பட்டவை.

என் நாடகத்தைப்பற்றி நானே என்ன சொல்ல இருக்கிறது! என்னருமைத் தமிழர்களைப் படித்துப்பாருங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். இம்முதல் முயற்சிக்குத் தமிழ்ப்பெருமக்களின் ஆதரவு கிடைக்குமானல் மற்ற நாடகங்களையும் ஒவ்வொன்றாக அச்சேற்ற எண்ணியுள்ளேன்.

இந்நாடகத்தை. என்னை அன்புடன் வளர்த்த என் ஆச்சியும், குலசேகரன் பட்டணம் வக்கீல் முத்துசாமி பிள்ளையவர்கள் மனைவியும், தானுதிப்பிள்ளை பரம்பரையில் வந்தவருமான திருமதி உலகம்மாள் அவர்கள் நினைவுக்காக வெளியிடுகிறேன்.

முகவுரை எழுதியுதவிய உயர்திரு எஸ் டி. சுந்தரம் அவர்களுக்கும், சிறப்புரைகள் தந்துதவிய புரட்சிக்கவிஞர் உயர்திரு பாரதிதாசன் அவர்களுக்கும், உயர்திரு T. K. ஷண்முகம் அவர்களுக்கும், உயர்திரு கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்களுக்கும், உயர்திரு 'குலாம்' அவர்களுக்கும் என் நன்றிகலந்த வணக்கங்கள்.

அச்சிட்டு அளித்த ஹாஜிஜி அச்சகத் தலைவர்க்கும், அங்கு தொழில்செய்யும் இளைஞர்களுக்கும் என் நன்றி.

இளங்கோ நிலையம், }
ஆத்தூர், 22-6-50. }

'மேகலை'

நாடகக்கழகத் தலைவரும், நடிக மணியும் கலைவானருமான

ஔவை **T. K. ஷண்முகம் அவர்கள்**

எழுதிய வாழ்த்துரை

ஆசிரியர் சில ஆண்டுகளுக்கு முன் எழுதிய "மேகலை" என்ற சரித்திரந் தழுவிய கற்பனை நாடகத்தை நான் படித்திருக்கிறேன்.

நாடகம் புனைவதற்குரிய ஆற்றலுடையவர் இவர் என்பதை அன்றே உணர்ந்தேன்.

"பாஞ்சாலங்குறிச்சி அல்லது மண்வாசி" என்ற இந்த நாடகத்தைப் படித்தபிறகு நான் முன்பு கொண்ட எண்ணம் மேலும் உறுதிப்பட்டதென்பதை மகிழ்ச்சியோடுகூற ஆசைப்படுகிறேன்.

ஒரு நல்ல நாடகத்திற்குத் தேவையான கதைக் கட்டுக்கோப்பு; உணர்ச்சி நிறைந்த சம்பவங்கள்; தெளிவான உரையாடல்; நகைச்சுவை யாவும் இந்நாடகத்தில் பொருந்தியிருக்கின்றன.

நாடகத்தின் ஏழாம் காட்சியில் உலகம்மனின் கண்களைப் பிடுங்கிய தன் கணவன் முன்னிலையில் சக்தி வடிவமாக நின்று பேசும் 'உலக நாயகி' தமிழ்ப் பெண்குலத்திற்குப் பெருமைதரும் ஒரு அற்புத சிருஷ்டி.

நாடகத்தின் அடிப்படைக் கருத்து முன்னேறிச் செல்லும் இன்றைய உலகுக்கு மூட நம்பிக்கையாகத் தோன்றலாம். என்றாலும் ஆசிரியர் இதைக் கற்பனையென்றே குறிப்பிட்டு விட்டமையால் அவா மக்களை ஏமாற்ற விரும்பவில்லை என்பது நன்கு தெளிவாகிறது.

"கட்டபொம்மனும் பட்டமேறியுள்ளான்" என்று ஆசிரியர் இந்த நாடகத்தின் இறுதியில் குறிப்பிட்டிருப்பது பின்னால் நிகழ்ந்த வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை, தானாதிப்பிள்ளை முதலியோரின் வீரஞ் செறிந்த உண்மைச் சரிதங்களை நமக்கு நினைப்பூட்டுகின்றது. ஆசிரியரை வாழ்த்துகிறேன்.

சென்னை 6,
20—6—50.

அன்பு, **டி. கே. ஷண்முகம்,**
"அவ்வையகம்"

நாடகக் கழகத்தின் ஆசிரியர் குழுவின் தலைவரும், 'மோகினி' 'கன்னியின் காதலி', 'லைலா மஜ்னு' முதலிய படங்களின் உரையாடல் எழுதியவருமான உயர் திரு

# எஸ். டி. சுந்தரம்

## அவர் எழுதிய முகவுரை

"மேகலை" எனது அருமை நண்பர்....இவர் இதயமே ஒரு கலைச் சோலை....அந்த இன்பச் சோலையிலே எத்தனையோ கலைச் செடிகள்! அதிலே ஒன்றுதான் இந்த நாடக நூல்.

நாடகம் உருவாவது கடினம்.. நடிப்புத் திறமையும், சிந்தனைத் திறமையும் இன்றியமையாதவை. இவர் நடித்த பல நாடகங்களைக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். அறிவிலே தெளிவு, ஆராய்சி நிறைவு, சொல்லிலே வேகம், நடையிலே புதுமை, கதையிலே துரிதம், கற்பனையில் ஓட்டம், அமைப்பிலே பின்னல், அத்தனையும் அமைந்த சிறந்த கலைப்புலவரின் ஆக்கந்தான் இந்த நூல்.

நாடகத்தைப் பார்த்தேன்...படித்தேன்...சிந்தித்தேன்...சுவைத்தேன்.... தேன் நாவுக்கு, தென்றல் உடலுக்கு, இவரது தீந்தமிழ் மனதுக்கு. சில காட்சிகள் உணர்ச்சிகளை உலுக்கிவிடும்; சில உள்ளத்தை மலர்விக்கும்; சில உயிரின் வேரைத் தொட்டுவிடும்.

சரித்திர ஆசிரியர்களின் சிந்தையைக் கவர்ந்த இடம் பாஞ்சாலங்குறிச்சி. சுதந்திரப் போரின் பலிபீடம். எண்ணிறந்தபேர் தம்முயிரைக் களப்பலி கொடுத்து வீரத்தை நிலைநாட்டினர் இந்தக்குறிச்சியிலே! ஆயிரமாயிரம் உயிர்கள், அத்தனையும் துடித்து வானிலே கலந்

தன இந்த இடத்தில், விடுதலைக்காக! எத்தனை வாலிபர் கள்! அவர்கள் உடல் பொருள் ஆவி யெல்லாம் இந்த மண்ணுக்காக காவு கொடுத்தது இந்தப் படுகளத்தில்தான் ....இத்தனை அழிவின் காணிக்கைகளை ஏற்றபின் அழியாத பெயரை நிலைநாட்டிவிட்டது இந்த அற்புதப் பிரதேசம்!

இந்த அருமையான இடத்தைப் பின்னணியாக வைத்து, ஆசிரியர் தமது கற்பனைக் கோட்டையை அசைக்கமுடியாத உறுதியுடன் கட்டியுள்ளார். அந்தக் கோட்டையிலே பறக்கும் வெற்றிக் கொடியாக்கியிருக்கிறார், இதில் வரும் காதல் சம்பவத்தை....வேற்றுமையிலே ஒற்றுமையைக் காண்பவனல்லவா தமிழன்! ஆதலால் துன்பத்தின் நடுவே இன்பம் காட்டுகிறார்... அழிவின் இருட்டிலே ஆக்க ஒளியை வீசுகிறார்... இவரது இன்பத்தமிழின் இதய கீதத்துக்கு இனிய கலைவீணை பக்க வாத்தியமாக இயங்கிக்கொண்டே இருக்கிறது.

நாடகம் எழுதிய இவரை வாழ்த்துகின்றேன். மற்ற நாடகங்களையும் விரைவில் வெளியிட வேண்டுகிறேன். பல இன்னல்களுக்கு நடுவிலும் கலைவளர்க்கும் இவருக்கு எனது நன்றி. நீங்கள் இந்தப "பாஞ்சாலங் குறிச்சி"யைப் படித்தால் மட்டும் போதாது... ஒரு முறை நடித்துப்பாருங்கள்.... அப்போது தெரியும் எழுத்துக்களின் வேகம்! எண்ணங்களின் மின்சார சக்தி! செய்யுங்கள்...அதுதான் கலைப்பணி!

அன்பன்,

27—5—50,
சென்னை.

எஸ். டி. சுந்தரம்

முத்தமிழ்க் கழகத்தின் தலைவரும், "தமிழர் ஆட்சி"
ஆசிரியருமான உயர்திரு

# கி. ஆ. பெ. விஸ்வநாதம்

## அவர்கள் சிறப்புரை

அன்பர் "மேகலை" அவர்களால் எழுதி வெளியிடப்பெற்றுள்ள பாஞ்சாலங்குறிச்சி என்ற நாடக நூலை இன்று பார்வையிட்டு பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன்.

உண்மையைத் தழுவியுள்ள வரலாற்றில் இருட்டாக உள்ள இடத்தை கற்பனையால் ஒளிபெறச்செய்து அருமையாக அமைந்துள்ளது இந்நாடகநூல்.

நடிப்பதற்கு ஏற்ற அமைப்பிலும், பேசுதற்கு ஏற்ற நடையிலும் எழுதியுள்ள இந்நாடக நூல் பொது மக்களால் விரும்பி வரவேற்கப்படும் என நம்புகிறேன்.

ஆசிரியர் "மேகலை" அவர்கள் மேலும் இது போன்றபல தமிழ் நாட்டு வீரர்களின் வரலாறுகளை நாடகமாக எழுதி உதவி நாட்டுக்கும் மொழிக்கும் மக்களுக்கும் நற்றொண்டு செய்து, புகழ் அடையவேண்டும் எனப் பெரிதும் ஆசைப்படுகிறேன்.

தங்களன்பிற்குரிய,

திருச்சிராப்பள்ளி, 20—6—50.

கி. ஆ. பெ. விசுவநாதம்.

[இஷாஅத்தே இஸ்லாம் வெளியீடுகள், பகுத்தறிவுப் பண்ணைப் பயிர்கள் முதலியவற்றின் ஆசிரியரும், 'சமாதானம்' மாதத்தாளின் பொறுப்பாசிரியருமான 'குலாம்' எனப்படும் ஹாஜிஜி சாஹிப் அவர்களின் மதிப்புரை.]

---

கற்பனைக் கதைகள் பல நம் நாட்டில் எழுதப் படுகின்றன. இவைகளில் நூற்றுக்கு தொண்ணூற்றெட்டு மூட நம்பிக்கைகளை வளர்ப்பனவாகவும், இயற்கைக்கும், அனுபவத்துக்கும் முரண்பட்ட முடிவுகளைக் கொண்டவைகளாகவும் இருக்கக் காண்கிறோம். ஆனால் 'பாஞ்சாலங்குறிச்சியில்' அறிவைத் தீட்டும் படிப்பினைகள் காணப்படுகின்றன.........................................................

இது போன்ற 'பாஞ்சாலங்குறிச்சி' யைக் கற்பனை செய்தவருக்கு நாம் கடமைப்படுகின்றோம். பாஞ்சாலங்குறிச்சியின் ஆசிரியருடன் எனக்கு நெருங்கிய பழக்கமில்லா விட்டாலும், அவர் உன்னத முறையில், எளிய நடையில் நன்றாக எழுதவும், அப்படியே மேடைகளில் பேசவும், எழுதியதை நடித்துக்காட்டவும் பார்த்திருக்கின்றேன். கற்பனையாளர்கள் பேச்சாளர்களாகவும், நடிகர்களாகவும் அமைவது சகஜமல்ல. அப்படியே பேச்சாளிகள் எழுத்தாளிகளாக இருப்பதும் சகஜமல்ல. ஆனால் 'பாஞ்சாலங்குறிச்சி' எழுதியவரிடம் இவை எல்லாம் அமைந்திருப்பதுடன், அவர் வயிற்றுப் பிழைப்புக்கார எழுத்தாளர், கற்பனையாளர், பேச்சாளர், நடிகராக இல்லாமல், ஒரு லட்சியவாதியாக, லட்சியத்திற்காக உழைப்பவராக இருக்கக் காண்கிறேன். ..............

லட்சியவாதியாகையால்தான், 'பதி பக்தி' என்னும் மூட நம்பிக்கையில் சிறந்தவர்களாகிய நம்மவர்களுக்கிடையில் எதிர் நீச்சு அடிக்கும் முறையில் தன் கற்பனையில் பதி பக்தி என்ற பூர்வீக மூட நம்பிக்கையை சுக்கு நூறாக்கும் பொருட்டு 'நாயகன் பெரிதல்ல, எனக்கு நாடே பெரிது; பதிபாசம் பெரிதல்ல, மண்பாசமே பெரிது; விதிக்குப் பணிவேன்; சதிசெய்யும் பதிக்குப் பணியேன்' என்று கூறித்தன் பதிக்கு எதிராக, "எடுங்கள் வாளை"

என்று தன் வாளையுருவி நாட்டுப்பற்றற்று வேசியின் பற்றால் தன்னறிவு இழந்த தன் கணவன் தாளுதிபதியை, மனைவி உலகநாயகி எதிர்ப்பதாகக் கற்பனை செய்துள்ளார் — —.

ஆத்தூர்,
20-6-50.

'குலாம்'

# நாடகத்தின் உறுப்பினர்கள்.

1 தானுதிப் பிள்ளை — பாஞ்சாலங்குறிச்சி அரசரின் அமைச்சர்.
2 சின்னையன் — சின்னவேலி பாளையப்பட்டுத் தலைவன்.
3 வெள்ளையத்தேவன் — சின்னவேலி பாளையக் காரரின் அமைச்சன்.
4 கறுத்தையன் — சின்னவேலி பாளையக்காரரின் கையாள்
5 யதார்த்தம் — சின்னவேலி அரண்மனைப் பணியாள்.
6 வீரையன் — தானுதிப் பிள்ளை மகன்.
7 மல்லன்
8 மராட்டிய சேனுதிபதி — (தானுதிப் பிள்ளை மாறு வேடத்தில் சின்னவேலி பாளையத்தில் இருக்கும் போது)
9 வேலையாள்
10 உலகநாயகி — தானுதிப் பிள்ளை மனைவி.
11 வைரமணி — பெயர் பெற்ற தாசி.
12 வஜ்ரம் — வைரமணியின் பணிப்பெண்.
13 இந்துமதி — சின்னையன் மகள்.
14 பெண் துறவி — வைரமணி.

## கதை நிகழுமிடம்:

வோட்டப்பிடாரத்திலும் சின்னவேலிப் பாளையத்திலும்.

# பாஞ்சாலங்குறிச்சி
## அல்லது
# மண்வாசி

### முதற்காட்சி

இடம் :- ஒட்டப்பிடாரம் உலகம்மன் கோவில் - தீபாராதனை நடக்கிறது.

காலம் :- மாலை.

உறுப்பினர் :- தானாதிப்பிள்ளை - பாஞ்சாலங் குறிச்சி அரசரின் அமைச்சர்.
உலகநாயகி - தானாதிப்பிள்ளை மனைவி.

தா-தி பி:- அம்மையே! உன் அருள் இருக்கும் வரையில் இந்தப் பாஞ்சாலங்குறிச்சிப்பாளையத்துக்கு குறைவேது! என்ன, உலகநாயகி! அம்மன் கண்களில் உள்ள மரகதக் கற்களின் மகிமை தெரியுமா..?

உ.-நாயகி:-தெரியாமல் என்ன! நிரம்பவும் விலையுயர்ந்தது என்கிறீர்களா?

தா-தி பி:- ஆம்! ஆனால் விலையுயர்ந்தது என்பது மட்டுமில்லை! ஆனால் அம்மன் கண்களிலுள்ள கற்களை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். யாராவது அதைக் கைப்பற்றிவிட்டால் தான் நம் பாளையத்துக்கே ஆபத்து! அதுவரை நம் பாளையத்தை வெல்ல மூவரேயானாலும் முடியாது!

உ-நாயகி:- அப்படியா! இந்த மர்மம் யாருக்கும் தெரியாமல் இருக்க வேண்டுமே..!!

தா-திபி:- அதில் இன்னொரு விசேஷமல்லவோ இருக்கிறது! என் கையால் எடுத்து விட்டால் தான் ... நாட்டுக்கு நாசகாலம் ஏற்பட்டு விடும் ... தான் சாக யாரேனும் மருந்து சாப்பிடுவார்களா ??

உ-நாயகி:- ஆம் நாதா! அப்படியானல் நம் பாளையத்தை வெல்ல யாராலும் அகாது! நம்மைப் போல் பாக்கியசாலி யார் இருக்கிறார்கள்!

## இரண்டாம் காட்சி

இடம் :- சின்னவேலி பாளையக்காரன் சின்னையன் அரண்மனை.

காலம் :- காலை நேரம்.

உறுப்பினர் :- சின்னையன் - சின்னவேலி பாளையப்பட்டுத் தலைவன். வேள்ளையத் தேவன் - பாளையக்காரனின் அமைச்சன். கறுத்தையன் - பாளையக்காரனின் கையாள். யதார்த்தம் - அரண்மனைப் பணியாள்.

சி-யன் :- என்னடா கதை பேசுகிறீர்கள்! அந்த தானுதிப் பிள்ளைக்கு அவ்வளவு செல்வாக்கா ?

கறு-யன் :- ஆம் எஜமான்!

யதா-ம் :- கறுத்தையா ....! அந்தக் கோவிலைப் பற்றிச் சொல்லவில்லையே!

கறு-யன் :- ஆமா எஜமான்! அந்த வோட்டப் பிடாரத்திலே இருக்கும் அம்மன் ரொம்பவும் சக்தியுடைய அம்மன் ...... சொல்லி வரங்கொடுக்கு

மாம் .... அந்த அம்மன் தான் தானுதிப்பிள்ளைக்குக் குலதெய்வமாம்! தெய்வபலம் இருக்குமட்டும் .... .... .... அவனை வெல்லுவதென்பது முடியாத காரியம்.

வெ-யன் :-கோழைப்பயலே ... ... என்ன முடியாத காரியம்..?? என்ன கறுத்தையா, நீ கூட இவ்வளவு பயங்களியா .?

யதா-ம் :- இங்கிருந்துகிட்டே சொல்லமாட்டீங்க! பாஞ்சாலங்குறிச்சி மண்வாசியை என்ன கண்டீங்க எஜமான்! நம்மைத் துரத்தின முயலைப்பற்றி சொல் அண்ணேன் எஜமானுக்கு! வெள்ளையன் பேசுகிறதுக்கு என்ன .... பாண்டிச்சேரியிலே பறங்கிகளோடே பலகாரம் சாப்பிடுகிறது என்று நினைச்சுகிட்டீங்களா?

சி-யன் :- முயல் ... உங்களை துரத்திவிட்டதா ....!! என்னடா கேழ்வரகில் நெய் வடிகிறது என்கிருய். கேட்கும் எங்களுக்கு மதியில்லை என்று எண்ணிருயா? எ பாளையத்தின் பழம் பெருமையையும் பராக்கிரமத்தையும் பழித்துப் பேச வேண்டும் என்றே என்னிடம் பழம் புராணம் பேசுகிறீர்களா ...? இந்தப் பேடிப்பயலை பெரியவனுய் மதித்துப் பேசுகிறேனே .... அதுவல்லவோ பிசகு!

கறு-யன் :-இல்லை எஜமான் .... அதுவும் வாஸ்தவம் ...

சின்-யன் :-எதுவும் வாஸ்தவம்!! முயல் உங்களைத் துரத்தினது வாஸ்தவமா?

வெ-யன் :-மனிதனை முயல் துரத்துமா .... ரொம்பவும் விந்தையாயிருக்கே ...

யதா-ம் :- எஜமான்! .... வந்து .... நாங்கள் முயலைத் துரத்திகிட்டே போனோம் ...

சின்-யன்:-ஏண்டா! முயல் உங்களை துரத்திற்று என்றல்லவோ சொன்னாய் ........ இப்போ ....

யதா-ம் :-கேளுங்கள் பாஞ்சாலங்குறிச்சி எல்லைக்குள்ளே போய் முயல் அந்த மண்ணை மிதிச்சுதோ இல்லையோ ... அவ்வளவுதான் .... அப்படியே எதிர்த்துக்கிட்டது ....

சின்-யன்:-அப்புறம் !

யதா-ம் :- அப்புறம என்ன விழுப்புறம்! அண்ணன் ஓட... நான் ஓட.... அண்ணன் வேகமாய் ஓட ... நான் அதைவிட வேகமாய் ஓட .... அப்புறம் ஒரே ஓட்டப் பந்தயம் தான் ....

சின்-யன்:-ஏண்டா வெட்கமாஇல்லே இதைச் சொல்ல உனக்கு ...

யதா-ம் :-வெட்கமென்னங்க .... உண்மையைச் சொல்வதற்கு! அப்புறம் அது முயலாட்டமே இல்லைங்க ....சிறுத்தைப் புலியாகவே மாறிவிட்டது .... இங்கே இருக்கிற யாராயிருந்தாலும் .... அப்படித்தான் ஓடியிருக்கணும் எஜமான் !

சின்-யன்:-நிறுத்தடா முட்டாள் ...., கதை பேசுகிறாயே !

கறு-யன்:-இல்லே ... நிஜம் தான் பேசுகின்றான் அவன் !

சின்-யன்:-அப்படியானால் பாஞ்சாலங்குறிச்சியைப் பணிய வைக்க முடியாது என்பதற்குத்தான் இரண்டு பேரும் சேர்ந்து இப்படி முன் கூட்டியே ஒரு கதை தயாரித்தீர்களா ?

கறு-யன்:-எஜமான் ! பாஞ்சாலங்குறிச்சியைப்பணிய வைக்கமுடியும் ... ஆனால் ஒன்று செய்யவேண்டுமே...

சின்-யன்:-என்ன செய்யணும் ?

வெ-யன்: சொல் கறுத்தையா !

சின்-யன்:-பிரான்சில் இருந்து வந்த மருந்து பூராவையும் கொளுத்தியாவது தீர்த்து விடுகிறேன் ... இந்த

பாஞ்சாலங்குறிச்சியையே புகைத்துத் தள்ளி விடுகிறேன் ....

கறு-யன்:-அதெல்லாம் வேண்டாம் .... அந்த ஒட்டப் பிடாரம் கோயில் அம்மன் கண்களிலே .... இரண்டு மரகதக் கற்கள் பதிக்கப்பட்டிருக்கின் றன..... அவ்விரண்டும் எத்தனை லட்சம் ரூபாய் பெறும் என்று மதிப்பிட முடியாத மாணிக்கங் கள் .... அந்த மரகதக் கற்களை நாம் கைப்பற்றி விட்டோமானல் .... பாஞ்சாலங்குறிச்சியே பாழாய்விடும் அந்த நிமிஷத்திலேயே....!! இது தான் அந்த மண்ணின் மகத்துவம் .... இந்த ரகசியத்தை எவ்வளவு கஷ்டப்பட்டுக் கண்டு பிடிக்க வேண்டியிருந்தது ....

சின்-யன்:-இதுதானு பிரமாதம் ....

வெ-யன் :-எப்படியும் கொண்டு வந்து விடலாம் அந்தக் கற்களை ....!

யதா-ம் :- சாமி கண்ணைப் பிடுங்குவதா ....!!! மகா பாபம் ஆச்சே !

சின்-யன்:-மகா சாமி ! சாமியை ரொம்ப நேரில் பார்த் தவன் !! .... போடா நாம் நட்ட கல்லுதானடா சாமி பூதமெல்லாம் ...

கறு-யன் :-எனக்குங் கூட பயமாயிருக்கு எஜமான் ! என் உடம்பெல்லாம் மயிர்க் கூர்ச்செரிகிறது .... ஆனல் அந்தக்கண்களைத் தானுதிப்பிள்ளை கைப் படவே பிடுங்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த நாட்டுக்கு அழிவு ஏற்படுமாம் .... அது தானே அங்குள்ள கஷ்டம் ... நாம் எடுத்துக் கொண்டு வருவதானல் பாஞ்சாலங்குறிச்சிக்கு ப்பழுது ஒன்றும் ஏற்படாதே..., அவன் கையா லேயே பிடுங்கவேண்டுமே !!

சின்-யன் :-கறுத்தையா! வேண்டுமானால் பார்! அந்த தானாதிப்பிள்ளை கையாலேயே அந்தக் கற்களை எடுத்துத் தரும்படி செய்கிறேன் ... என் செல்வப் புதல்வி இந்துமதி மீது ஆணை .... எங்கே குழந்தையை இன்று காலையிலிருந்து காணவில்லையே ... இரு ... இந்த சின்னையன் மூளை செய்யும் வேலையைப் பார் ... வளவனூர் தாசி வைரமணியைத் தெரியுமா உனக்கு ?

யதா-ம் :- தாசி வைரமணியைத் தெரியாதவன் ஒரு மனுஷனா ? அவன் ஒரு ஆண் மகன் தானா ? .... சொல்லுங்க எஜமான்! அங்கே போய் .... என்ன சொல்லணும் ....

சின்-யன்:-போ...ய்...! சீ! முட்டாள் இங்கே வா!!
(காதில் ஏதோ சொல்லுகிறான்)

## மூன்றும் காட்சி

இடம் :- வளவனூர் தாசி வைரமணி வீடு.

காலம் :- மாலை

உறுப்பினர் :- வைரமணி – பெயர் பெற்ற தாசி. வஜ்ரம் – வைரமணியின் பணிப் பெண், யதார்த்தம், சின்னையன்.

வைரம: யார் நீ! இங்கே எங்கே வந்தாய் !?

யதா-ம் :- என்னங்க !! என்னைத் தெரியதா...உங்களுக்கு ?

வைரம் :- அடி! வஜ்ரம் !! இங்கே வா! இது யாரோ பைத்தியக்காரன் போலிருக்கு ... இவனை வெளியே அனுப்பு.

யதா-ம் :- யாருக்குப் பயித்தியம் ... அதற்குள்ளே மறந்து விட்டீங்களே அம்மா .... மீனாட்சியம்மன் சன்னதியிலே நீங்கள் நாட்டியம் ஆடினபோது அந்தக் கூட்டத்திலே நானுந்தானே இருந்

தேன் ... என்னம்மா இதுக்குள்ளே என்னைத் தெரியவில்லை என்கிறீங்களே !

வஜ்ரம் :- (உள்ளிருந்து வந்துகொண்டே) இது யார் இந்த வக்கிரம் ? சுக்கிர பகவானுட்டம் பார்க்குது ... ஏய் ! இப்படி விக்கிரகமாட்டம் நிற்கிறே ! .... என்னம்மா சிரிக்கிறீர்கள் ... இதை எந்த மரத்திலே இருந்து பிடிச்சு வந்தீங்க ....

யதார்த்தம் :- ஏண்டி மாடு ஓட்டுகிறே .... ஏய் என்கிறே டுய் என்கிறே ... மரத்திலே இருந்து பிடித்து வருகிறதற்கு நான் என்ன எருமையா அல்லது கன்றுக் குட்டியா ?

வஜ்ரம் :- எருமை மரத்திலேயா இருக்கும் ... உன்னை எருமை என்று சொன்னால் தான் பெருமையாச்சே ... அதுக்கு பொறுமையாச்சும் இருக்குமே .... வெறுமையே ... இரு ... அருமைகெட்டுப் போய் விடுவாய் ... அப்புறம் !

யதார்த்தம் :- அடே என் அடுக்குத்தொடர் அலங்காரமே ! சும்மா யிரு ... அம்மாகிட்டே எம்மாம் பெரிய சமாசாரம் சொல்ல வந்தேன் ... சின்னவேலி பாளையக்காரர் ... இப்போ .... இங்கே வருகிறேன் என்றார் ...

வைரம் :- யாரு ! பாளையக்காரரா !! நிஜமாவா !!!

யதார்த்தம் :- பின்னே பொய்யா சொல்லுவேன் ? ... இந்த யதார்த்தம் வாயிலே பொய் வருமா !! இந்தா ஆ ஆ ... எஜமானே வந்து விட்டாங்களே !!

வைரம் :- வாருங்கள் ! வாருங்கள் ! எஜமான் ... நான் பண்ணின புண்ணியம் ... என்ன தவம் செய்ததோ இந்தக் குடிசை ... தங்கள் நாவசைந்தால் இந்த நாடசையாதா ? அடியாளை வரச் சொன்னால் வந்து காத்திருக்க மாட்டேனா தங்கள் அதிகார அரண்மனை வாசலிலே ....

சின்-யன்:-வைரமணி! ஆஹா ... நீ நம் பாளையத்தில் இருப்பதே பாக்கிய மல்லவா எனக்கு! உன் தயவை நாடாத பாளையக்காரனும் ஜமீன்தார னும் இருக்கிறுனு இந்தப் பிராந்தியத்திலே! விளக்கை நாடும் விட்டில் பூச்சிகளுக்கு கணக்கு உண்டா என்ன? உன் அழகிலும் ஆடல் பாடலிலும் ஆட்படாத ஆண் மகனுண்டா இந்தப் பாளையத்திலேயும் ... இல்லை ... எந்தப் பாளையத்திலேயும்....

வைரம :- என்ன எஜமான்... நீங்கள் கூட இப்படிப் புகழ் கிறீர்கள்! அடியாள் புகழ் எல்லாம் தங்கள் ஆதரவாலல்லவா?

சின்-யன்:-உண்மையை அப்படியே சொல்லுகிறேன் .... வெறும் முகஸ்துதி அல்ல .... உன் அழகுக் கேற்ற ஆபரணம் .... ஓரிடத்தில் இருக்கிறது.... ஓட்டப்பிடாரம் அம்மன் கோவிலிலே இரண்டு மரகதக் கற்கள் இருக்கின்றன.... அதற்குத் தங் கப்பூண் கட்டி உன் காதுகளிலே அணிந்து பார்க்க வேண்டு மென்று நான் எத்தனையோ தடவை எண்ணியதுண்டு.... நாம் எண்ணும் எண்ணமெல்லாம் ... எங்கே நிறைவேறுகிறது. ... உம் ... அதை நீ அணிந்தால் சாக்ஷாத் லக்ஷிமிதேவி போலவே இருப்பாய் .... உனக்கு ஓட்டப்பிடாரம் தானுதிப் பிள்ளையைத் தெரியுமா ....

வைரம :- என்ன எஜமான்! தெரியுமான்னு கேட்கி றீங்க! தானுதிப் பிள்ளையைத் தெரியாத தாசி யிருப்பாளா ... ?? ஆனுல் அவர்தான் தாசி யென்ருல் தலையைத் தூக்கிக்கூடப் பார்க்க மாட்டாரே ....

சின்-யன் :- ஆமாம் ... தாசியைப் பார்க்கக்கூட மாட்டானு !! அதிலேயே அவனுக்கு ஒரு தற்பெருமையா... என்ன வைரம் ! உன் கண் வீச்சுக்கும் பின் வீச்சு உண்டா ... அழகுக்கு அடிமையாகாத ஆண் மகன் உண்டா இந்த உலகத்திலே .. ஆயிரம் பேசினுலும் .... வைர நெஞ்சு கொண்டவனும் வைரமணியைக் கண்டால் வைராக்கியமெல்லாம் பறந்து போய் விடாதா.. நீ மட்டும் மனசு வச்சா அவனைக் காற்றுடி போல் கரங்க வைத்து ... அவன் பம்பரம் போல் உறங்கிப் போய்விட மாட்டானு... தேனில் விழுந்த ஈ மீளுமா ? ஆனுல் உன் சாமர்த்தியம் எவ்வளவு இருந்தாலும் அவனிடம் மட்டும் பலிக்குமா என்கிறதுதான் சந்தேகமாயிருக்கு..

வைரம :- எஜமான் ! என்னை என்னமோவென்று நினைத்து விடாதீர்கள்.. இந்தத் தானுதிப் பிள்ளையைப் போல் தற்பெருமை கொண்ட ஆண்கள் எத்தனையோ பேரை .... கண்டிருக்கிறுள் இந்த வைரமணி ! இப்படி வைராக்கியமுடைய ஆள் திரும்பும் வரைதான் கஷ்டம் ... திரும்பிவிட்டால் வஜ்ரமா பற்றிக் கொள்வார் பிறகு ...

யதா-ம் :- அடி .... அப்படியானுல் தள்ளி நில் .... நீயும் வஜ்ரமாச்சே ... எஜமான் நீங்களும் தூர நில்லுங்கள் ... வஜ்ரம் பிடிச்சா விடாதல்லவா ....!

சின்-யன் :-என்னடா ஒட்டிக் கொள்ளும் ...?

வைரம :- அவன் கிடக்கிறுன்... இவள் என் வேலைக்காரி... இவள் பெயர் வஜ்ரம் .... அதற்கென்னமோ உளறுகிறுன் இவன் .... இவனை எங்கிருந்து பிடித்தீர்கள் ?

சின்-யன் ;-வைரம் ! இவன் எங்கள் சமஸ்தானத்து வேலையாள் ... இவன் பெயரே யதார்த்தம் ....

வைரம :- ஆளும் அப்படித்தான் போல் இருக்கு.... பேரும் பொருத்தமாயிருக்கே ....

யதா-ம் :- அது எங்க அப்பா அம்மா செய்த புண்ணியம்.!

வஜ்ரம் :- இப்படி உன்னைச் சுப்ரதீபமாகப் பெற்றதற்குச் சொல்லுகிறாயா ?

யதா-ம் :- பொருத்தமான பெயர் வைத்ததற்குச் சொன்னால்.... பாருங்கள் எஜமான் கேலி பண்ணுகிறாள் இவள் ...

சின்-யன்:- சரி சரி! வைரம், தானாகிப் பிள்ளையை உன் வலையிலே சிக்க வைக்க முடியுமென்று சொல்கிறாய் .... அப்படியானால்! முடிந்தால் நீ நிரம்பவும் சாமர்த்தியக்காரி!

வைரம :- என்ன இவ்வளவு சந்தேகப் படுகிறீர்கள் .... அடுத்தப் பிட்டுத்திருநாளுக்குள்ளே வளர்ப்புக் கிடாய் வருவதுபோல் போகும் இடமெல்லாம் என் பின்னே வரச்செய்கிறேன் பாருங்கள் .... இது சத்தியம்...இல்லையென்றால் இந்தத் தாசித் தொழிலையே விட்டுத் தலை மொட்டையடித்து... தலயாத்திரை கிளம்பி விடுகிறேன் ... சம்மதம் தானே எஜமான் ! மீனாட்சியம்மன் மேலே ஆணை !!

சின்-யன்:- இதென்ன பைத்தியக்கார சபதம்...வைரமணி! ஆராயாமல் அவசரப்பட்டு சபதம் கூறிவிட்டாயே !.... உன் புகழ் என்ன அந்தஸ்து என்ன ஆடல் பாடல் என்ன !

வைரம :- இல்லை எஜமான்,- ஆராய்ந்து தான் சபதம் கூறினேன் .... வேண்டுமானால் பாருங்கள் இந்த வைரத்தின் விசையெல்லாம் வரும் சித்திரைக்குள்ளே !

சின்-யன் :- இருந்தாலும் அம்மன் கண்களிலிருக்கும் மரகதக்கற்களை மட்டும் அவரிடமிருந்து வாங்கிவிட முடியாது உன்னால்.

வைரம் :- என்ன எஜமான் நீங்கள் கூட இப்படிப் பேசுகிறீர்கள் ... அம்மன் கண்ணென்ன ...? அவர் கண்ணை அவர் கையாலேயே பிடுங்கித்தரச் சொன்னாலும் செய்யும்படிச் செய்கிறேன் .... அப்போது அல்ல இந்த வைரத்தை வாயார வாழ்த்தப் போகிறீர்கள் ... இப்போதே புறப் படுகிறேன்.

சின்-யன் :- மீன் குஞ்சுக்கு நீந்தவா பழகிக் கொடுக்க வேண்டும் ... ! அப்படியானால் இவனையும் அழைத்துக்கொண்டு போ .... நிரம்பவும் உபயோகமாகயிருப்பான் .... இவனை நம்பலாம் !

யதா-ம் :- அம்மா அப்படியானால் இவளையும் கூட்டிக் கொண்டு போகலாமா ?

வைரம :- அவளில்லாமலா ?

யதா-ம் :- அது தானே கேட்டேன் ... பருப்பில்லாத சாம்பாரா ??

சின்-யன் :- இந்தா உனக்குச் செலவுக்குப் பொருள் .... இதையும் கொண்டு போ ...

வைரம் :- பொருள் வேண்டாமெனக்கு ... இதென்ன கரும்பு தின்பதற்குக் கூலியா வேண்டும் !! அவரை அடைய வேண்டுமென்ற என் நெடுநாள் ஆவலைப் பூர்த்தி செய்ய தெய்வ ரூபத்திலே நீங்கள் அல்லவோ வந்து தூண்டினீர்கள். ... ஆஹா இதைத்தான் ஊழ் என்கிறதோ உலகம் ....

சின்-யன் :- வைரமணி ! ஆனால் உன் வெற்றி வெறியிலே மரகதக் கற்களை மட்டும் மறந்து விடாதே!

வைரம :- எஜமானின் நன்றியை மறக்கும் நாய் உண்டா உலகத்திலே .... உங்கள் காலடியில் கட்டளை மாகச் செலுத்துகிறேன் அக்கறைகளை! சரி தானே!

## நான்காம் காட்சி

இடம் :- ஒட்டப்பிடாரம் தானுதிப் பிள்ளை வீடு.
காலம் :- மாலை
உறுப்பினர் :- தானுதிப் பிள்ளை, உலகநாயகி, குழந்தை வீரையன், தாசி வைரமணி.

தா-தி பி :-கண்ணே ! அம்மன் கோவிலுக்குப் போய் வருவோமா ? மூடுபல்லக்குக் கொண்டுவரச் சொல்லியிருக்கிறேன் ... உனக்காக !

உ-நாயகி:-அதற்கென்ன அப்படியே செய்வோம் ! பூஜைக்கு வேண்டியவற்றை எடுத்து வருகிறேன்.

தா-தி பி :-அம்மன் திருநாளைக்குத் திரள் திரளாக கிராமங்களிலிருந்து குவிந்திருக்கிருர்கள் ... ஜாதி வித்தியாச மில்லாமல் சகலருக்கும் சாப்பாடு அளிக்க உத்தரவிட்டிருக்கிறேன்.!

உ நாயகி:-மற்ற எல்லாப் பாளையங்களிலிருந்தும்கூட மக்கள் வருவார்களா ?

தா-தி பி :-என் அப்படிக் கேட்கிருய் ....! சிவககங்கை, புதுக்கோட்டை, எட்டயாபுரம், சிங்கம்பட்டி, மின்னூர் முதலிய எல்லாப்பாளைய சமஸ்தானுதிபதிகளும் வந்து விடுவார்கள் இன்று மாலைக் குள்ளே !

உ-நாயகி:-அப்படியானல் சின்னவேலி பாளையக்காரனும் வருவானு திருவிழாவுக்கு ?

தா-திபி :-அவன் வரமாட்டான்! அவனுக்கு அழைப்பு அனுப்பவில்லை ... அன்னியனைச் சதமென்னும் அவனுக்கு அழைப்பு அனுப்புவேணு !!! பிரஞ்சுக்காரன் உதவியால் பிழைக்க வழிதேடும் பேதைப்பயல் ஒரு தமிழ் மகனு !! அண்டிப் பிழைப்பவன் ஓர் ஆண் மகனு ??

உ-நாயகி:-எனக்குப் பயமாகவே இருக்கிறது. மரகதக் கற்களின் மகிமை தெரிந்தால் மண் பாசமில்லாத மாபாவி நம்மையும் அன்னியனுக்கு அடிமையாக்கி விட்டால் என்ன செய்வது !!

தா-திபி :-உலகநாயகி! பாஞ்சாலங்குறிச்சி மக்களைப் பதடிகள் என்று எண்ணுகிறாய்? பகைவன் யாராயிருந்தால் என்ன ?? அவன் பங்காளியாயினும் பகைவனுக்கு இடங்கொடுத்தால் அவனுடைய பச்சை ரத்தத்தைக் குடித்து அவனைப் பரலோகம் அனுப்பிய பின் அன்றோ மறுவேலை பார்ப்பேன் ... உலகம்மன் உள்ளளவும் இந்தப் பாளையத்தைப் பணிய வைக்க இந்தப் பாருலகில் பகைவனும் இருக்கிறானு ?? பாஞ்சாலங்குறிச்சியின் மண்வாசி யறியாத மடையன் சின்னையன் என்ன கண்டான் !! எங்கே குழந்தை வீரையன் ! என் குலவிளக்கு உண்மையில் தமிழர்களுக்கே குடிவிளக்காய் விளங்கப் போகிறான். சரித்திரம் எழுதும் சரிகாரர்கள் எவ்வளவு முயன்றாலும் மறைக்க முடியாத அளவுக்கு அவன் வீரமும் புகழும் நிலைக்கப் போகிறது ... இந்நாட்டிலே !!

உ-நாயகி:-நேற்று, கனவிலே ...

தா-திபி :-உம் ... !

உ-நாயகி:-நேற்று, கனவிலே குமரி ஒருத்தி அலங்கோல

மாக இருக்கக் கண்டேன் ...

தா-தி பி :-குமரியா ....!! அப்படியானல் அம்மை உலகம்மை ஞகத்தான் இருக்கும். உம் ....

உ-நாயகி:-அருகில் சென்று என்னை அறியாமல் அழ ஆரம்பித்தேன் ....

தா-தி பி :-அதற்கு அப்பெண் ஒன்றும் சொல்லவில்லையா??

உ-நாயகி:-என்னை அருகில் அழைத்து, "பைத்தியக்காரி! அழுவார்களா ? புண்ணிய பூமியில் புல்லுருவிகள் முளைக்கின்றனவே! புல்லுருவிகளைப் பிடுங்கி விடுதல் புனிதமான கடமையல்லவா !! அதை விடுத்து அழுவார்களா ?? அழுதால் ஆத்திரமெல்லாம் அணைந்தன்றோ போகும் ... நீயும் வாளெடுக்கும் வன்மை பெறுவாய் ஒரு நாள்," என்ருள். அப்படியே விழித்துக் கொண்டேன்.... இப்போது நினைத்தால் கூட மயிர்க்கூர்ச்செரிகிறது ...

தா-தி பி :-உலகு ! உட்கார் ... ஆயாசப்படாதே ... புனிதத் தமிழ் நாட்டில் ... புல்லுருவிகள் தோன்றி விட்டனர் என்பது உண்மைதான் ... சமூகக் களை பிடுங்க தமிழக் காளையர் உள்ளவரை கவலை வேண்டாம் உனக்கு.... ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அடிமைப் படாத தமிழனை அடிமை கொள்ள யாராலும் ஆகாது .... தமிழ்ச்சாதியே உலகில் தனிச்சாதி யென்பதை மறுப்பவன் உண்டா ...இந்த உலகத்திலே ...? எல்லோரும் ஓர் இனம் என்பதை வேறு எங்கு கண்டோம்.. தமிழனின் தனி மதிப்புத் தண்ணீர்க்கடல் கடந்தும் .... சென்றிருப்பதை வேறு எங்கு கண்டோம். சாதிக்கொரு நீதியும் சமயத்துக்கொரு நீதியும் தமிழனுக்குண்டா... ? இல்லை.. எக்காலும் இல்லை...! இது ஆளப் பிறந்த சாதி

...ஆளப்படும் சாதியில்லை ....! வீரரத்தம் கொதிக்கும் சாதி .... வீழ்ந்து படும் சாதியல்ல !! இந்தச் சின்னையனைப் போல் சின்னப் புத்தி படைத்த தமிழன் தான் அம்மை சொல்லும் புல்லுருவிகள் !! புல்லுருவியைக் கல்லி எறிய கணக்கற்ற காளையர் காத்திருக்கின்றனர் என் ஒரு சொல்லுக்காக .... சொன்னால் சுட்டுச் சாம்பலாக்கி விடமாட்டார்களா!!! ... தமிழன் தமிழன் ரத்தத்தையே சிந்துவதா என்றுதான் பார்க்கிறேன் .... வேறு வழியில்லையானால் அதுவும் செய்யத்தான் வேண்டும்...யார், குழந்தையா... வாடா என் கண்ணே.

(குழந்தை வீரையன் வருகிறான்)

உ-நாயகி:-எங்கேடா போயிருந்தாய் ... கோவிலுக்குப் போக உனக்காகவல்லவோ காத்திருக்கிறோம்...

வீரை :- அப்பா ! ஏன் அப்பா சிலபேர் அழுகிறார்கள் ?

தா-தி பி :- ஏதாவது கஷ்டம் வந்தால் அழுவார்கள் .... ஏன் .... யார் அழுதார்கள் இப்போது ...!

வீரை :- ஏன் அப்பா ! நீங்கள் சேனாதிபதியாச்சே .... நீங்கள் இருக்கும் போது யாருக்கும் கஷ்டம் வரக்கூடாதல்ல ....

உ-நாயகி:-ஆமாம் .... ஏதோ புதிரல்லவா போடுகிறான் !

தா-தி பி :-அப்படி யாருடா கண்ணு அழுதார்கள்....?

வீரை :- ஏன் அப்பா ... ஒரு பெண் அப்படி அழுதாள் என்று வைத்துக் கொள்ளுங்களேன் .... அவளுக்குக் கஷ்டம் ஏதோ இருக்கக் கண்டுதானே அழுதிருக்க வேண்டும்....

தா-தி பி :-பெண் அழுதாளா ... யார் அந்தப் பெண் ? பெண் தெய்வாம்சமாயிற்றே .... பெண்ணினுடைய கண்ணீர் இந்த மண்ணில் சிந்துவதா ....

வீரையா! அப்படி அழுத பெண் யார் ... அவ ளுக்கு நேர்ந்த துன்பத்தைப் போக்குவோம்... சொல்லுடா கண்ணு !!

வீரைய :- அவளை இங்கேயே அழைத்து வரட்டுமா ... அப்பா !

தா-திபி :- கூட்டிவாடா கண்ணு ! உலகநாயகி ! உன் மக னின் உத்தம குணத்தைப் பார்த்தாயா .... மக் கள் மனம் வாடச் சம்மதியான் அவன் காலத் திலே ... விளையும் பயிர் முளையிலே ... யாரும் கண் கலங்க சகிக்க மாட்டான் !

உ-நாயகி :- ஆம் தந்தை யறிவு மகனுக்கு என்று பெரியவர் கள் சும்மாவா சொன்னார்கள்...!

தா-திபி :- ஆனால் அதில் உனக்கு மட்டும் பங்கில்லையா ? பிள்ளையின் அறிவுக்குப் பெற்றவள் தானே பொறுப்பாளி...அதுதான் பெண்மையை தெய் வீகம் என்கிறது தமிழ் நாடு ... அம்மையின் அருள் பெற்ற உன் வயிற்றில் பிறந்த வீரைய னுக்குச் சொல்ல வேண்டுமா !

வீரைய :- (பாசாங்கு அழுகையுடன் வரும் வைரமணியைக் கைப்பிடித்து வீரையன் அழைத்து வருகிறான்). இந்த அம்மை தான் அப்பா .... கண்ணெல்லாம் சிவந்து போய் இருக்கிறது ... அழவேண்டா மென்று சொல்லுங்கள் அப்பா நீங்களும் .... !

உ-நாயகி :- அம்மா ! வாம்மா !! உனக்கு என்ன துன்பம் நேர்ந்தது ?

தா-திபி :- பெண்ணே ! இப்படி உட்கார் .... உனக்கு என்ன வேண்டும்...?

வைரம :- சுவாமி ! இன்னாளென்று தெரியாத இந்த ஏழை யிடம் எவ்வளவு அன்பு காட்டுகிறீர்கள் !!

தா-தி பி:- பெண்ணே! என்றும் மனிதனை சுவாமி என்று அழையாதே... பெரும்பாவம்... மனிதனுக்கும் கடவுளுக்கும் எவ்வளவு ஏற்றத்தாழ்வு இருக்கிறது.... நீ யார்? விவரமாகச் சொல்.

வைரம :- நான் ஒரு அனாதை .... எனக்கு அடைக்கலம் தாருங்கள்.....!

உ.-நாயகி:- அம்மையே! இந்த வீட்டில் புகுந்த உனக்கு இனித்துன்பமா? இது உன் வீடு... உனக்குத் துன்பம் செய்தவர் யார்?

வீரைய :- சொல்...அவனை என் வாளுக்கு இரை கொடுக்கிறேன் இந்த க்ஷணமே!

வைரம :- ஆஹா! கண்ணே! இப்படி இனிய மக்களைக் கண்டதே இல்லை இப்பாவி.... ஆணும் பெண்ணும் குழந்தையும் கூட காட்டும் அன்பும் ஆதரவும் தான் என்னே! தங்கள் ஆதரவு இருக்கும் வரை.... அந்தச் சண்டாளன் சின்னையன் என்ன செய்ய முடியும் என்னை! இனி என் கற்புக்குப் பங்கம் வராது...!

தா-தி பி:- யார்!!! சின்னவேலி பாளையக்காரனா.... கசடன்!.

வைரம :- ஆம் ஸ்வாமி! அவன் கொடுமைக்குப் பயந்தே என் செல்வம் அனைத்தையும் துறந்து விட்டேன்... எனக்குப் பொருள் பெரிதல்ல ... எனக்கு மானமே பெரிது

உ-நாயகி:- அம்மா நீ எங்களுடன் இந்த வீட்டிலேயே இருக்கலாம்.

வைரம :- நான் அவ்வளவு தகுதியுடையவளா? அம்மன் சன்னதியில் எங்கேனும் ஒரு வீடு அமர்த்திக் கொடுத்தால் அதுவே எனக்குப் பேருபகாரம்.. ஆனால் குழந்தை வீரையனை மட்டும் தினம் ஒரு தடவையாவது கண்டு களிக்க அனுமதி தர வேண்டும்.

தா-தி பி :- அதற்கென்ன அப்படியே செய் .... உன் வீட்டிற்கு வரச் சொல்லுகிறேன்.

வீரைய :- உன்னைப் பார்க்கத்தானே! தினம் வருகிறேன்... கட்டாயமாக !

உ-நாயகி:- உனக்கு ஓய்வு இருக்கும் போதெல்லாம் இங்கு வரவேண்டும் ...

தா-தி பி :- பெண்ணே ! உன் பெயர் என்ன ?

வைரம :- என்னை வைரமணி என்று சொல்லுவார்கள்.

தா-தி பி:- பெயரே நன்றாயிருக்கே !

வீரைய :- நான் என்ன வென்று கூப்பிடட்டும் இந்த அம்மாவை ?

உ-நாயகி:- ஏன் ! என்னைக் கூப்பிடுவதைப் போல 'அம்மா' வென்றே கூப்பிடடா கண்ணு! அதுவும் அம்மா தான் !

வைரம :- ஆஹா .... அந்தப் பாக்கியம் கிடைக்க வேண்டுமே இந்தப் பாவிக்கு !!!

தா-தி பி:- உனக்கு வேண்டிய சௌகர்யங்களைச் செய்ய இன்றே ஆட்களை அனுப்புகிறேன்....அதுவரை இங்கேயே இருக்கலாம் எங்களுடன்...

உ-நாயகி:- வைரமணி நீயும் என்னுடன் பிறந்தவள் தான் .... வேறு வித்தியாசமாக எண்ணிக் கொள்ளாதே ! கோவிலுக்குச் சென்று வருவோமா இப்பொழுது ?

வீரைய :- நான் புது அம்மா கையைத்தான் பிடித்துக் கொள்வேன் !

வைரம :- இருடா ராஜா நான் தூக்கிக் கொள்கிறேன் ...

## ஐந்தாம் காட்சி

இடம் :- வைரமணி வீடு

நேரம் :- மாலை

உறுப்பினர் :- யதார்த்தம், வஜ்ரம், வைரமணி, தாணுதிப் பிள்ளை, வீரையன்.

யதா-ம் :- அடி ! வஜ்ரம் !! அன்றைக்கு அம்மா சொன்னது நிஜமாப் போச்சு பார்த்தாயா ?

வஜ்ரம் :- அட ! உனக்குக் கூட நிஜமும் பொய்யும் தெரிகிறதே . என்ன....நிஜமாப் போச்சு !

யதா-ம் :- அடி ! வஜ்ரம் பிடிச்சா விடாதுன்னு சொன்னது நினைவிருக்கா ? மாசம் ஆறுகிவிட்டது என்று மறந்து விட்டாயா....என்னடி....!!

வஜ்ரம் :- நான் உன்னைப் பிடித்துக் கொண்டா இருக்கிறேன் என்னமோ...நேற்று அப்பா கேட்டதற்குச் சொன்னேன் உன்னைக் கட்டிக் கொள்கிறேன் என்று... ! சும்மா சொன்னதை நிஜம் என்று நினைத்துக் கொண்டாயே ... பைத்தியமே....!

யதா-ம் :- போடி. நீ என்னைக் கட்டிக் கொள்கிறதும் நான் உன்னைக் கட்டிக் கொள்கிறதும் தான் பெரிய காரியமா ? அது முடிந்தால் போல் தானே....! அதைப்பற்றி யல்லடி நாம் வந்த காரியம் கை கூடிவிடும் சீக்கிரத்திலேன்னு சொல்ல வந்தேன்... அது தான் மரகதக் கல்லு!... எங்க இந்த ஆறு மாசமாத்தான் தாணுபிப் பிள்ளை வைரமணி கிட்டே ததிங்கிணத்தோம் போடுகிறாரே ! அன்றைக்குச் சொன்னாற் போல வளர்கிடா மாதிரி யல்ல இந்த வீட்டை வளைய வளைய வருகிறார் ... ...

எனக்குச் சுற்றவேண்டிய வேலையே இல்லை நீதான் கூடவே இருக்கிறுயே ... ... சிருஷ்டியின் விநோதம்! விநோதம்!...... இல்லாவிட்டால் உலகம் நடைபெறுமா.........?

வஜ்ரம் :- அட! என் பழைய பஞ்சாங்கமே! ஏது வேதாந்தம் முற்றிப்போச்சா! ரொம்பத்தான் சிருஷ்டியையும் விநோதத்தையும் கண்டு கொண்டாய்..! சரிதான் சீக்கிரம் வேலையைப் பார்.... தானுதிப் பிள்ளை வந்து விடுவார்.... வெந்நீர் அடுப்பை சீக்கிரம் எரியவிடு!

யதா-த :- எரிய விடாதடி என் வயிற்றெரிச்சலை... அடி! அதோ அம்மாவும் அய்யாவும் வருகிறுர்கள் ...

(வந்து கொண்டிருக்கின்றனர்)

வஜரம் :- (வருபவர்கள் காதில் படும்படி உரக்கப் பேசுகிறுள்) உனக்குத்தான் தப்பில்லை என்றல் அய்யாவையுமா அப்படி நினைத்துக் கொண்டாய்.... நேற்றுக் கூட ஒரு வைர வியாபாரி வந்தான்.... ....... அம்மாவுக்கு... அவன் கொண்டு வந்ததிலே .... ஒரு கல்லு கூட பிடிக்க வில்லை...

யதா-ம் :- அப்படித்தான் ஒருத்தருக்குப் பிடிச்சால் மற்றவர்களுக்குப் பிடிக்க வில்லை ... என்னது உன்னைப் பிடித்து இருக்கு.... உனக்கு என்னைக் கண்டாலே பிடிக்க வில்லை.

தா-தி பி:- அப்படியா! நேற்று அந்த வைர வியாபாரி வந்தானு? என் வைரமணிக் கேற்ற வைரம் எந்த வியாபாரியிடம் இருக்கப் போகிறது ... அழகுக்கு அழகு செய்வாருண்டா இந்த உலகிலே!

யதா-ம் :- அப்போ! கிடைக்காது என்கிறீர்களா!! எஜமான் !!! நீங்கள் மனது வைத்தால் கிடைக்கா

தது்ண்டா ....? நீங்கள் உத்திரவு கொடுங்கள் நான் ஆயிற்று எப்படியும் கொண்டு வந்து விடு கிறேன்... வாங்கிக் கொடுத்தால் !!

வைரம :- போடா முட்டாள்! எப்பொழுதும் நகை நகை என்று நகைப் பிசாசு மாதிரி பஞ்சறைக்கிறயே வரும்போதெல்லாம்...! என் ஸ்வாமி அவர்கள் கிடைக்கதே எனக்குப் போராபரணம்...என்ன தவம் செய்தேனே தங்களை யடைய....! வஜ்ரம்! சீக்கிரம் சமையலாகட்டும்... ஏண்டா! போய் காரியத்தைப் பாரேன்! சனியன்களுக்கு வேளா சமயம்... ஒன்றும்.... தெரியாது...

வஜ்ரம் :- சமையல் எல்லாம் ஆச்சு அம்மா.... சாப்பிடுகிற சமயம் ஆச்சேன்னு தான் வந்தேன்...!

வைரம :- இப்போ பசி யில்லே! சமயம் தெரிந்து வா... போ...!

யதா-ம் :- நமக்கு நல்ல சமயம் தான்.... வா.... போகலாம் .... அம்மா....!

வஜ்ரம் :- என்னடா தலையைச் சொரிந்து கொண்டு அம்மா அம்மா...அம்மா அம்மான்னு கிட்டு

யதா-ம் :- வந்....து... காரியத்தைப் பாரு என்கிறீர்களே ... வந்த காரியத்தைப் பாருங்கள் என்று சொல்லலாம் என்று நினைத்தேன்.... அதுக்குள்ளே கோவிச்சுகிறீங்கள்....

தா-தி பி:- என்ன சொல்லுகிறான் உன் வேலைக்காரன்.... என்ன வந்தகாரியம் என்கிறான்....அது என்ன..!

வைரம :- அவன் சொல்வதை அவன் தான் புரிந்து கொள்ள வேண்டும்.... நாம் பேசிக் கொண்டு வந்தோமல்லவா... அதைச் சொல்லுகிறான் போலிருக்கு...

தா-தி பி :-வைரமணி! இப்படி வா....என் மனதை இவ்வளவு கொள்ளை கொண்ட மங்கை இதுநாள் வரை ஒருத்தியும் இருந்ததில்லை .... வனப்பில் சிறந்திருந்தாலும் வாடாமல்லிகையைப் போன்றவள் என் மனைவி... ஆனால் நீ ரோஜா மலர் போன்றவள்... அழகிலும் மணத்திலும் உன் அருகில் கூட வரமுடியுமா எங்கப் பெண்ணாள்? .. உன் அன்பான சொற்களைக் கேட்கும் போதெல்லாம் அமிழ்தம் உண்ணுவது போலல்லவா இருக்கிறது... வாழ்விலே இவ்வளவு இன்பத்தை ஏற்படுத்தி யிருக்கிறான இறைவன்! இதுநாள் வரை இவ்வின்பத்தை உணராமல் அல்லவோ உழன்று வந்திருக்கின்றேன்.... உன்னைப் பார்ப்பதில் இவ்வளவு இன்பமா? உன்னை விட்டுப் பிரிந்து ஒரு விநாடி கூட இருக்க முடியவில்லையே... இப்படியே பகற்கனவு காணும் போது பக்கத்தில் யாரேனும் வந்து நின்றால் கூட உணர முடியவில்லையே ... இந்த இன்பமே ஒரு நாள் என்னைப் பைத்திய மாக்கி விடுமோ என்னமோ !!

வைரம :- ஆஹா உங்கள் சொற்களைக் கேட்கும் என்னையல்லவோ பைத்திய மாக்குகிறீர்கள் ... ஆமாம் .... என்ன இருந்தாலும் வாடும் மலருக்குத் தானே ஒப்பிட்டீர்கள்.

தா-தி பி :-அப்படி உன்னை ரோஜா மலருக்கு ஒப்பிட்டது குற்றமா கண்ணே ! அப்படியானால் மன்னித்து விடு என்னை !

வைரம :- அப்படிச் சொல்லாதீர்கள்! என்னிடம் அப்படிக் குத்தும் முட்கள் இருக்கின்றனவா ?

தா-தி பி :-இல்லை கண்ணே ! துன்பத்தில் ஆழ்ந்திருந்த என்னை இன்பத்தில் ஆழ்த்தியது நீயல்லவா ?

துன்பத்தின் ஊடே கிடைக்கும் இன்பம் தான் இன்பம் எனப்படும்... கண்ணே துன்பத்திலும் இன்பத்தைக் காண்பவன் தான் உண்மை மனிதன்.

வைரம :- ஐயா ஐம்புலனுக்கு இன்பம் தருவது போல அறிவுக்கும் இன்பம் அளிக்கிறீர்களே! உங்களுக்கு அடியாள் என்ன கைம்மாறு செய்ய முடியும்!! என் உடலின் தோலைத் தங்களுக்கு மிதியடியாகச் செய்து போட்டாலும் ஈடாகாதே! அமாம் குழந்தை வீரையன் இன்று காலையிலிருந்து இங்கு வரவே இல்லையே அழைத்து வாருங்களேன் நீங்களாவது!

தா-தி பி ;-என்னமோ இப்பொழுது வர வர முரண்டு செய்கிறான் .... மிகவும் சூதுக்காரப் பயல். இதோ ... அழைத்து வருகிறேன் .... இருநதாலும் உன்பேரில் தான் அத்யந்த அன்பும் பாசமும் வைக்திருக்கிறான் ... நேற்று தூக்கத்தில் கூட விழித்துக் கொண்டு இங்கு வரவேண்டுமென்று பிடிவாதம் செய்தானம் .... .... இரு! வந்து விடுகிறேன் (போகிறார்)

வஜ்ரம் :- என்னம்மா ... நீங்க...! நம்ம பாளையக்காரருக்குக் கொடுத்த வாக்கை யெல்லாம் காற்று வாக்கில் விட்டு விட்டீர்களே! ..மாகதக் கல்லைப் பற்றிக் கேட்க மாட்டேன் என்கிறீர்களே!

யதா-ம் :- ஆமாம்மா! எடுத்து விட்ட பாம்பு எத்தனை நாளைக்கு ஆடும்...உங்களுக்கே கேட்கப் பிரியமில்லாமல் போனல் போங்கம்மா .... .... நாங்களும் அல்லவோ இங்கே வந்து அகப்பட்டுக் கொண்டு முழிக்கிறோம்.

வைரம :- யதார்த்தம்! இவ்வளவு நம்பும் இவரை நான் ஏமாற்றவா? எப்படிடி கேட்கட்டும்! எவ்வ

ளவு அன்பு கொண்டுள்ளார் !

வஜ்ரம் :- கல்லைக் கேட்டால் ஏமாற்றுகிறதென்ன ? உங்கள் கிட்டே நிஜமாலும் பிரியம் இருக்கிறதா இல்லையா என்று தெரிந்து போகிறது இதிலிருந்தாவது !

யதா-ம் :- நாம் வந்த காரியத்தை மறந்து விடவா அதனுலே ! கல்லையும் ... வாங்கிக் கொள்ளுங்கள் .... அவரையும் கூட்டிக் கொள்ளுங்கள் ... ஒரே கேள்வியிலே இரண்டு காரியமும் நிறைவேறுகிறது...! மீனுட்சியம்மன் மேலே முக்காலும் ஆணை யிட்டீங்களே ! இந்த மரகதக் கல்லை வாங்க வில்லையானுல் தலை மொட்டை யடித்து தலயாத்திரை போகிறதாகச் சொன்னீர்களே !! அதை நினைத்துப் பாருங்கள். இல்லா விட்டால் மாட்டேன் என்றுவது சொல்லுங்கள் ! நாங்களாவது நம்ம பாளையத்துக்குப் போய் விடுகிறோம்.

வைரம :- இன்று எப்படியும் கேட்கிறேன் .... அ....தோ வருகிறூர் ! நீங்கள் இருவரும் உள்ளே போங்கள் ! (தானுதிப் பிள்ளையும் குழந்தை வீரையனும் வருகின்றனர்) வீ ரை ய ா வாடா என் கண்ணு !

வீரைய :-என்னைத் தொடாதே ! உன்னுலே தானே எங்கம்மா சாப்பிடக் கூட மாட்டேன்என்கிறூர்கள் ...... நீ....பின்னே அம்மாவை அழக் கூடாது என்று சொல்லு .... அப்போது தான் உன் கிட்டே வருவேன் !

தா-தி பி :-வீரையா....அப்படி யெல்லாம் சொல்லாதேடா கண்ணு ! இவளும் உனக்கு அம்மா தானே !

வைரம :- கண்ணு! நானும் அப்புறம் அழுவேன்....வாடா ராஜா ... அம்மாவை அழ வேண்டா மென்று

சொல்லுகிறேன்....சரிதானே !

வீரைய :- அப்படியானல் சரி !.... அம்மா!....எல்லாம் இந்த அப்பாவாலேதான்... இந்த அப்பா வேண்டாம் ....கெட்ட அப்பா !

தா-தி பி :- அட ! போக்கிரிப் பயலே !

வைரம :- குழந்தைக்கு... நேற்று வந்த வைர வியாபாரியிடம் ஒரு வீரகண்டை வைரம் பதித்தது, வாங்கியிருக்கிறேன்... ஆனல்....

தா-தி பி :- என்ன இவ்வளவு பெருமூச்சு ! சொல் சீக்கிரம் .... உம் !

வைரம :- இல்லை... மரகதக் கற்கள் தாம் கிடைக்கவில்லை அவனிடம் ! கோமேதகம் இருந்தது.... வைடூரியம் வைரம் எல்லாம் இருந்தது... அதெல்லாம், யாருக்கு வேண்டும் !... மரகதக் கற்கள் மறு சன்மத்திலாவது கிடைக்கட்டும் .... நீங்கள் எனக்குக் கிடைத்ததே பேரானந்தம்! வஜ்ரம்! இங்கே வாடி... குழந்தையைக் கொண்டு போய் அந்த வீரகண்டையை அணிவித்துக் கூட்டிவா.

வீரைய :- சீ ! போக்கிரீப் பயலே ! நீ உள்ளே போய் அந்த வீரகண்டையை அணிந்து வா எப்படி இருக்கிறதென்று பார்க்கலாம்.... மரகதக் கற்களுக்காக மயங்காதே ! அது கிடைப்பது சுலபமல்லவே... விலை நூருயிரம் வராகன் வேண்டுமானலும் கொடுத்து விடலாம்! கிடைக்க மாட்டேன் என்கிறதே! நானும் எங்கெங்கோ ஆட்களை அனுப்பிப் பார்த்தேன்....!

வைரம :- நான் கொடுத்து வைத்தது அவ்வளவு தான்.... ஆனலும் அந்த ஆசையை மட்டும் மறக்க முடியவில்லை....அதிலும் உங்கள் தயவிருந்தும் கிடைக்கவில்லை என்னும் போது தான் எனக்குத் துக்

கம் பொறுக்க வில்லை. கிடைக்கும் படியான தாய் இருந்தால் நீங்கள் தாமலா போய்விடு வீர்கள். உங்கள் மனதை நான் அறியமாட்டே ஞ என்ன ?... வேண்டாம்.... அந்த ஆசையை விட்டு விடுகிறேன்.

தா-தி பி:-......ஒ....ரி...ட...த்....தில் இருக்கிறது !

வைரம :- உங்கள்...செல்வாக்கு...செல்லாத இடமாக்கும்!

தா-தி பி:-உம்....என் செல்வாக்கு.... செல்லாத இடமுண் டா இந்த பாளையத்திலே !?

வைரம :- யாருடைய தயவையாவது தேட வேண்டு மாக் கும் அப்படியானல் ?

தா-தி பி:-ஒருத்தர் தயவும் தேவையில்லை... கண்ணே!... இன்று இரவு எப்படியும் தருகிறென்... சரிதா னே!.... எனக்கு எதுவும் பெரிதல்ல.... என் உடல் பொருள் ஆவி எல்லாம் உன்னுடையதே! உன் அன்புக்கு ஈடாக இந்த உலகில் எனக் கொன்றும் இல்லை... வைரமணி...! கண்களைப் போன்ற வேறு இரண்டு வைரங்களை உன் பெட் டியிலிருந்து எடு!... சாக்கிரதை! யாரிடமும் சொல்லி விடாதே!

வைரம :- எதற்கு நாதா ?

தா-தி பி:-அம்மன் கண்களுக்குப் பதிலாக வைப்பதற்குத் தான்....

வைரம :- வேண்டாம்... அம்மன் கண்களிலுள்ள மரகதங் களா... !!!

தா-தி பி.-கண்ணே' அம்மன் கண்ணென்ன.... என் கண் களை வேண்டுமானலும் பிடுங்கித் தருவேனே.... உனக்கில்லாததா....!

வைரம :- உஸ்... அப்படியெல்லாம் அபசகுனமாகச் சொல்லாதீர்கள் !

தா.தி பி:-இன்று நடுஜாமம் கோவிலுக்குப் போவோம்.... தயாராய் இரு!

வைரம :- தங்கள் விருப்பம்... குறுக்கே நான் என்ன சொல்ல முடியும்!

## ஆரும் காட்சி

இடம் :- தாஞதிப் பிள்ளை வீடு

காலம் :- நடு இரவு

உறுப்பினர் :- உலகநாயகி, குழந்தை வீரையன்,

உ-நாயகி:-தெய்வமே! இருக்க இடம் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவது தான் நீதியா...அண்டைக்கலம் என்று வந்து... என் குடியை அலைக்கழிக்கவா வந்து சேர்ந்தாள் ... என்று அவள் என் வீடு வந்து சேர்ந்தாளோ அன்றையிலிருந்தே அவரை ஆட்சி செய்ய வந்து விட்டாளே!...எப்படியெல்லாம் இருந்த அவர்... இன்று வீடென்று வருவதில்லையே! குடி மக்கள் குறை கூறுவதை குறிப்பால் உணர்த்தினேனே! அதையும் தெரிந்து கொண்டு தான் அவள் வீடே கதியென்று இருக்கிறார்!... பாஞ்சாலங்குறிச்சி மன்னருக்குத் தெரியாதிருக்க வேண்டுமே!.... இந்தப் பயல்... என்ன.... இன்னும் தூங்க வில்லையே.... ராஜா!! வீரையா!!! நான் பேசினதெல்லாம் கேட்டுக் கொண்டு இருந்தானே என்னவோ .... போக்கிரிப் பயலே! நிஜமாலும் தூக்கமா?... நிஜமாத் தூங்கினல் கால் மட்டும் ஆடுமே! (கால் ஆடுகிறது) திருட்டுப்பயலே தூங்க வில்லையா.

வீரைய :-போம்மா எனக்கும் அழுகை வருகிறது! இந்தா அப்பா மட்டும் இனி நம்ம வீட்டுக்கு

வாட்டும் என்ன செய்கிறேன் என்றுபார்.... அந்த வாள் எங்கே... கொண்டாம்மா ... அந்த அம்மாவையும் அப்பாவையும் துண்டு துண்டாக வெட்டிப் போட்டு விடுகிறேன் ... என்னை இப்பவே அங்கே கூட்டிக் கொண்டு போம்மா!!.... உம்... எழுந்திரு...இனி நீ அழவே கூடாது... வாம்மா.... என்னம்மா யோசிக்கிறே!

உ-நாயகி:-கண்ணே! வேண்டாண்டா... அப்படியெல்லாம் சொல்லாதே ... இதோ பாரேன் நான் அழவில்லையே.... அவளும் அம்மா தாண்டா .... நீ படுத்துத் தூங்குடா கண்ணு!

வீரைய :-அவளை அம்மாண்ணு சொல்லாதேயம்மா .... காலையிலே அங்கே போயிருந்த போது... என்னமோ ... அப்பாகூட ரகசியம் பேசுகிறதற்கு... என்னை வெளியே போகச் சொன்னுள்.... மரகதக் கல்லுண்ணு கூட சொன்னுள்...

உ-நாயகி:-ஹா.... மரகதக் கல்லா.... அனர்த்தம் வந்துவிட்டது !!! ஐயோ !

வீரைய :-என் அம்மா இப்படி முழிக்கிறே!... வாம்மா.... அந்தச் சண்டாளியையும் அப்பாவையும் வெட்டி எறிஞ்சிடலாம்.

உ-நாயகி:-அம்மையே ! உலகநாயகி...இதென்ன விபரீத புத்தி... விநாச காலத்துக்கா....? இது என்ன?? என்னையறியாமல் என் மனம் சஞ்சலம் அடைகிறது... அமைதியாக வாழ்ந்த வாழ்வில் இன்று பெரும் புயலன்ருே வீசுகிறது... அம்மையே இந்த ஏழையைச் சோதிக்க வேண்டாம்....... விஷப் பரீக்ஷை செய்வதில்....ஒரு விளையாட்டா ... இதென்ன பூகம்பமா.... இல்லை என் தலை தான் சுழல்கிறதா....பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்துக்குப் பழுது வரலாமா தாயே !

வீரைய :-என்னம்மா திரும்பியும் அழுகிருய்! எனக்கும் அழுகை வருகிறது! (அழுகிருன்)

உ-நாயகி:-அழாதேடா கண்ணே! என்ன மதியீனம்!! உன்னெதிரில் என்னென்னமோ பைத்தியக் காரத் தனமாய்ப் பேசுகிறேனே! நீ அம்மை யை வணங்கிப் படுத்துக்கொள் மகனே! பழுது ஒன்றும் வராது நமக்கு.... உறங்கு மகனே!

வீரைய :-நீயும் படுத்துக்கோ அம்மா.

உ-நாயகி:-சரி கண்ணே!..................என்னடா எழுந்து பார்க்கிருய்?

வீரைய :-தூங்கிவிட்டாயா.... இல்லே.... இன்னும் அழுகி ருயா என்று பார்த்தேன்....

உ-நாயகி:-அழமாட்டேன் நான்...தூங்கு நீ (படுக்கிருன்)

['கண்ணைப் பிடுங்குகிருன்', 'கண்ணைப் பிடுங்குகிருன்' என்று வரிசையாய்க் கூக் குரல் கேட்கிறது. திடுக்கிட்டு விழிக்கிருள்]

உ-நாயகி:-அஹா!... என்ன இது? ... ஆம்... என்னமோ விபரீதம்தான்! எனக்கு ஆபத்து பெரிதல்ல .... என்று மண்ணில் பிறந்தோமோ....ஒரு நாள் இறந்துதானே ஆகவேண்டும்... என் ஜன்மபூ மிக்கு அபத்தென்ருல், நான் பிறந்த மண்ணு க்கு அபத்தென்ருல்... இனி இருந்தென்ன இறந்தென்ன? பெண்மைக்கு வைராக்கியம ஏற்பட்டால் அதைவெல்லும் ஆண்மகனும் உண்டா? எங்கே... அம்மையே... இதோ உன் சன்னிதிக்கு வருகிறேன்... சக்தி தேவதையே என்னுடன் வா.... அம்மையே குழந்தை யைக் காப்பாற்று.... ஊர்க்காவல் தெய்வங்களே என க்கு ஆண்மை அளியுங்கள்!!

## ஏழாம் காட்சி

இடம் :- உலகம்மன் கர்ப்பக்கிரஹம்

காலம் :- நடு இரவு

உறுப்பினர் :- வைரமணி, தானுதிப்பிள்ளை, உலக நாயகி, வஜ்ரம், யதார்த்தம்.

[ஒருபுறம் வைரமணி, வஜ்ரம், யதார்க்கம் ஒதுங்கி நிற்க தானுதிப்பிள்ளை அம்மன் கண்களைப்பிடுங்க நெருங்குகிறார்]

வைரம :- ஹா.... நாதா! வேண்டாம்.... ஐஐயோ!!!

தானுதி :- பேதையே! நீ ஏன் அஞ்சுகிறாய்? கூச்சலிடாதே!

(ஆவேசத்தோடு உலகநாயகி ஓடோடியும் வாளும்கையுமாக வருகிறாள்)

உ-நாயகி:- நிறுத்துங்கள்... என்ன காரியம்இது!! இந்த விநாசபுத்திகாட்டின் விபரீதத்திற்காக.... இந்த இழிசெயலைச்செய்ய இடம் தந்ததா உம்மனம் ....நீங்கள் ஆண்மகன் தானா? இல்லை உங்கள் உடம்பில் தமிழ் ரத்தம் ஓடுகிறதா... என்ன காரியம் செய்யத்துணிந்து விட்டீர்கள்!!!

தானுதி:- உலகநாயகி! உன்னை இங்கு யார் வரச்சொன்னார்கள்! நீ என்ன பேசுகிறாய்.. யாரிடம் பேசுகிறாய் தெரியுமா ! (கற்களை எடுக்கிறார்)

உ-நாயகி:- தெரியும்! யாரிடம் பேசுகிறேனா.. அம்மன் கண்களைப்பிடுங்கி அட்டூழியம் செய்த அநியாயக்காரரிடம் பேசுகிறேன்.... பிறந்த மண்ணின் மானத்துக்கு ஈனம் விளைத்த இழிதகையோரிடம் பேசுகிறேன்!....உங்களுக்கு வெட்கமில்லை? ...அம்மன் கண்களையா பிடுங்கினீர்கள்...? ஆயிரமாயிரம் தமிழரின் கண்களையல்லவோ பிடுங்

கிவிட்டீர் உம் கண்களையன்றோ பிடுங்கிக்கொண்டீர்... பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்தைப் பாழாக்கவா துணிந்தீர்.... அந்நியனிடம் நாட்டை அடிமைப்படுத்தவா அடிகோலிவிட்டீர் ....பறங்கிக்கு நாட்டைப் பணயம் வைக்கும் சின்னையன் சும்மவா விடுவான் உம்மையினி? கும்பனிக்காரன் பாடு இனிக்கும்மாளம் தானே கணிகையின் மையலில் நாட்டைக் காட்டிக் கொடுக்கவா துணிந்தீர்!! என்னால் நம்பமுடியவில்லையே உம் செயலை!!!

தானாதி:- இந்த நள்ளிரவில் இங்கு ஏன் வந்தாய்.... வீட்டுக்குப்போ... கணவன் என்பதை மறந்து கண்டதெல்லாம் பேசாதே.

உ-நாயகி:- கூறாதீர் மறுமுறை கணவன் நீர் என்று.... ஜன்மபூமிக்குச் சமாதிகட்டும் நீரா என் கணவர்! ....தமிழர்கட்குத்தளைபூட்டச்செய்யும் நீராஎன் கணவர்!! உம்மைக்கணவர் என்று கூறவும் வெட்கப்படுவாளே எந்த மங்கையும்...... ஹா... மாற்றானும் தூற்றுவானே உம்செய்கைக்கு.... அம்மன் கண்ணைப்பிடுங்கினால் அழிந்தொழியுமே சுதந்திரபூமி! மண்ணின் மானம் காக்கும் மரகதங்களையா பிடுங்கிவிட்டீர் மண்பாசம் அற்ற மாபாவியும் செய்யத்துணியானே இதை

தானாதி :- சீ ... நாயே! நீ ... எனக்குப் புத்திசொல்லவா? இங்கேயே என் வாளுக்கு இரையாக்கி விடுவேன்!

வைரம :- ஐயோ! இதென்ன விபரீதம்!!

உ.நாயகி:- இதோ என்கையிலும் வாள் இருக்கிறது! நாயகன் பெரிதல்ல.... எனக்கு நாடேபெரிது.... பதிபாசம் பெரிதல்ல.... மண் பாசமே பெரிது

.... விதிக்குப்பணிவேன் சதி செய்யும் பதிக்குப் பணியேன்... எடுங்கள் வாளை!

தானுதி :- போகிறது என்று பார்த்தால்... ரொம்பவும் மிஞ்சுகிருய்!

உ-நாயகி:- ஆம்... அநீதியை மிஞ்சுகிறேன்.... அட்டூழியத்தை மிஞ்சுகிறேன். ஆனால் அஞ்சிப்பல்லைக் கெஞ்சமாட்டேன்.... இப்போது நான் பெண் அல்ல... பேய்... முற்றும் மனைவி என்பதை மறந்தே போர்செய்யும்....

தானுதி :- என் உலகநாயகியா இப்படியெல்லாம் பேசுகிருள்! என் மனைவியா இப்படியெல்லாம் பேசுகிருள்!!

உ-நாயகி:- மனைவி என்று சொல்லாதீர் மறுமுறை! இப்படிப்பட்ட இழிகாரியம் செய்த உம் மனைவி என்று சொன்னால் உலகம் என்னை எள்ளி நகையாடி ஏளனம் செய்யும்!!

[தானுதிப்பிள்ளை உலகநாயகியை குத்திச்சாய்த்து விடுகிருர்]

உ-நாயகி:- ஹா...ஹா...

வைரம :- ஐயோ! என்ன காரியம் செய்துவிட்டீர்கள்!! பெண்ணைக் கொலைசெய்த நீரும் ஓர் ஆண் மகனு? தவறுதலை எடுத்துக்காட்டினல் தண்டனையா? அம்மை சொல்லியது அத்தனையும் உண்மைதானே! தவறை உணர்ந்து திருத்திக் கொள்வதை விட்டு... கொலை செய்துவிட்டீரே! என்றும் அழியாத பழியை அல்லவோ சம்பாதித்துக்கொண்டீர்! மரகதக்கற்களைப் பிடுங்கினல் மண்ணின் சுதந்திரம் போய்விடும் என்று என்னிடம் முன்னேயே சொன்னீரா... அடக்கமே உருவான அம்மைக்கே இந்தக் கதி

பென்றால் எனக்கெல்லாம் என்ன கதி தரு வீரோ? அம்மா!... அம்மா!.... மரகதத்தின் மகிமையும் மர்மமும் தெரியாதெனக்கு.... இப் போது தாங்கள் சொல்லத்தான் தெரிந்தேன் அதுதான் அந்தச் சண்டாளன் சின்னையன் இந்தக்கற்களைக் கொண்டு வரச்சொன்னு? அம்மையே! என்னை மன்னித்ததாக ஒரு வார் த்தை சொல்லுங்கள்.... அம்மா!.... அம்மா!!....

உ-நாயகி:- என்காரியம் நிறைவேறிவிட்டது.... சுதந்திரத் துக்காக.... இந்த மண்ணில் என் ரத்தம் சிந்தி யாகிவிட்டது.... என்னல் செய்ய முடிந்தது அவ்வளவுதான்.... அம்மன் கண்களுக்குப்பதி லாக என் கண்ணைக் கேட்டிருந்தால் ஆனந்த மாகத் தந்திருப்பேனே!.... ஐயா! மண்பாசத் தால் மட்டுக்கு மிஞ்சி உம்மை மதியாமல் பேசி னேன்... ஆம்.... கணவன் என்றும் பாராமல்!

தானுதி :- கண்ணே! நீ சொன்னதெல்லாம் உண்மையே.... சண்டாளன் நான் சதிசெயல் புரிந்த நாளு உன க்குப்பசி...? மரகதத்தின் மர்மம் தெரிந்தும் மதியிழந்தேன்... தெய்வமே! அறிவிழந்தேன், அருமை மனைவியையும் இழந்தேன்.... அதனல் அறியாத பழியையும் அடைந்தேன்... கண்ணே! அடக்கமே உருவான நீ சுதந்திர வெறியால் ஆவேசம் கொண்டாய்... தமிழ் நாட்டின் தனித்தேவே!... என்னை மன்னித்த தாக ஒரு வார்த்தை கூறமாட்டாயா?

உ.-நாயகி- எனக்குச்.... செய்யவேண்டியது.... ஒன்று

தானுதி - சொல் அம்மையே.... செய்கிறேன்.

உ-நாயகி- உம்போன்றோரை இந்த மண் சுமந்துகொண்டி ருப்பதே மிகப்பாவம்... இந்தக்ஷணமே... இந்த பூமியைவிட்டு... ஓடிவிடவேண்டும்... அப்

பொழுதுதான் என் உயிர் நீங்கும்... அதுவரை நீங்காது.... முடியுமானால்.... என்றாவது உம் கையாலே.... பழையபடியும்.... கண்களில் கற்களைப் பதியுங்கள்.... ஆனால்... என் கண்மணியை... வீரையனை... யாரிடம் ஒப்படைப்பேன். அம்மன் காப்பாள்!.... இப்படிப்பட்ட நீங்கள் அவனுடைய தந்தையென்பதை அவன் அறியக் கூடாது.... அதுதான் இந்தக்ஷணமே போகச் சொல்லுகிறேன்... போங்கள்! போங்கள்!!

[அழுதுகொண்டே தானாதிப்பிள்ளை செல்கிறார்]

(உலகநாயகியும் உயிர் விடுகிறாள்)

வைரம :- நான் இன்றே துறவுக்கோலம்கொண்டு தலயாத்திரை புறப்படுகிறேன்... என் பாவம் அளவற்றது... சண்டாளி நான் அல்லவோ சதிக்கெல்லாம் ஆதிகாரணமாயிருந்தேன்... எனக்கு இந்த ஜன்மத்தில் விமோசனம் இல்லை ... அம்மையே! குழந்தையை.... என் ராஜாவை .... என்கண்மணி வீரையனை வளர்க்கும் பொறுப்பை இவர்களிடம் ஒப்படைக்கிறேன்.... அம்மா.... அம்மா ... வீரமகளே விண்ணுலகம் சேர்ந்தாயோ....நீ தெய்வமாக நின்று நாட்டைக் காப்பாற்று! என் வீரையனைக்காப்பாற்று!.... யதார்த்தம்... அம்மையை அடக்கம்செய்.... வீரையனை உண்மையில் வீரனாக்கவேண்டியது உன்பொறுப்பு... எக்காரணத்தைக்கொண்டும் .... இன்று நடந்த அநியாயத்தை மட்டும் குழந்தையிடம் சொல்லாதே! கற்களை ஜாக்கிரதையாகப் பத்திரப்படுத்து.... சந்தர்ப்பம் வரும் போது.... அவனுக்குக் கற்கள் இருக்குமிடத்தைத் தெரிவி.... நானும் இதோ... இந்தக்ஷணமே

வெளியேறுகிறேன்.... என்றால் அல்லவோ இவ்வளவு விபரீதம் நேர்ந்தது!

## எட்டாம் காட்சி

இடம் :- (ஆறு ஆண்டுகளுக்குப்பின்) யதார்த்தம் வீடு

காலம் :- காலை

உறுப்பினர்:- யதார்த்தம், வஜ்ரம், வீரையன் (12 வயது நிரம்பியவன்)

யதார்த் :- அடி வஜ்ரம்! ஓடியா! ஓடியா!! தம்பியைக்கூட்டிவா பிள்ளை... இங்கு வந்து பாரேன்.... இந்தப் பெட்டியின் பின்னாலே கத்திமட்டும் தனியா நிற்கிறது!

வஜ்ரம் :- அட! நிஜமாத்தான்!.... வீரையா!... வீரையா.... இங்கே வந்து பார்

வீரைய:- (பெட்டிக்குப்பின்னாலிருந்து) பக்தர்களே! கீழே விழுந்து கும்பிடுங்கள் நான் யார் தெரியுமா? ஹா... ஹா...!

யதார்த் :- தெரியும் ஸ்வாமி!

வீரைய:- அப்படியானால் நான் யார் என்று சொல்லு பார்க்கலாம்.

யதார்த் :- சொன்னால்தான் தெரியும் ஸ்வாமி!

வீரைய :- சீ! முட்டாள்!

யதார்த் :- சாமிக்குக்கூட என்பேர் தெரிஞ்சுபோச்சே!

வீரைய :- டே! பேசாதே! வஜ்ரம்!! எங்கே உன் குழந்தை வீரையன்?

வஜ்ரம் :- (சிரித்துக்கொண்டே) ஸ்வாமி! என் குழந்தை இருக்குமிடம் உங்களுக்குத் தெரியாதா ஸ்வாமி! அடியாளை இப்படியும் சோதிக்கலாமா?

பெட்டிக்குப்பின்னுலிருந்து ஓடிவரமாட்டீரா ஸ்வாமி?

(ஓடிவருகிருன்)

யதார்த் :- ரா...ஜா!! நீயா ஒண்டிக்கிட்டு இருந்தாய்! யாரோ என்று அல்லவோ இருந்தோம்.

வீரைய :- இன்றைக்குச் சொன்னல்தான் சாப்பிடுவேன்! என்னுடைய அப்பா அம்மா யாரு.... எங்கே என்று நிஜத்தைச் சொல்லுங்கள்... வெளியே சென்றால் என்னைப்பார்த்து குசுகுசு என்று பேசுகிருர்கள்... மற்றவர்க்கெல்லாம் இல்லாமல்- எங்கள் ஆசிரியர் எனக்கு மட்டும் வாட்போர் சிலம்பம் எல்லாம் சொல்லித்தருகிருர்... உண்மையைச்சொல்லுங்கள்!

வஜ்ரம் ;- என்னடா கண்ணு! நாங்கள் தாண்டா உங்க அப்பாவும் அம்மாவும்... வேறு... யாரும் இல்லையடா...

வீரைய :- பொய்! டேய்... நீ எங்க அப்பாவா (வாளையுருவிப் பயப்படுத்துகிருன்)நிஜத்தைச் சொல்லு! குத்திடுவேன்!

யதார்த் :- ஐயோ.... இல்லை தம்பி.... நாங்கள் இல்லை! என்னை விட்டுவிடு அப்பா!... சொல்கிறேன்... ஆனல் இப்போமட்டும் சொல்லமாட்டேன்... இப்போ சொன்னல் சாமி கண்ணைக்கெடுத்துவிடும்... இன்னொருநாள் சொல்கிறேன்... ஆமாம்... நீ உன் பாடமெல்லாம் படித்தாயா வரவர வம்புத்தனம்தான் வளருகிறது...படிக்கிறதுமில்லை ஒன்றுமில்லை... உன் ஏட்டை எடு.

வீரைய :- நீ வேண்டுமானல் கேள்விகேள் அம்மா பதில் சொல்லுகிறேன்.

வஜ்ரம் :- எங்கே... வார்த்தைகளில் புனிதமானது எது?

வீரைய :- என்னம்மா இது தெரியாதா 'சுதந்திரம்'

வஜ்ரம் :- கடவுள் எங்கே இருக்கிறார்?

வீரைய :- ஏழைஎளியவர் ஹிருதயத்திலும் உழைப்பாளி களின் உழைப்பிலும்!

வஜ்ரம் :- விற்கக்கூடாதவை எவை?

வீரைய :- நீதியும் சுதந்திரமும்.

வஜ்ரம் :- யார் மேலானவன்.... தூக்குமேடை ஏறுபவனா.... ஏற்றுபவனா?

வீரைய :- சந்தேகமில்லாமல் ஏறுபவன் தான்

வஜ்ரம் :- எது புனிதமானது?

வீரைய :- தாய் நாட்டுக்காக இறந்து படுவது-

வஜ்ரம் :- எது நாகரீகம்?

வீரைய :- லட்சியத்திற்காகத் தியாகம் செய்வது.

வஜ்ரம் :- எது கேவலம்?

வீரைய :- கேவலத்திலும் கேவலம் அன்னியனை அண்டிப் பிழைப்பது.

வஜ்ரம் :- கண்ணே! உன் பாடங்களை நன்றாகப் படித் திருக்கிறாய்... உணர்ச்சியில்லாதவன்?

வீரைய :-மாமிசபிண்டம்.

வஜ்ரம் :- ஒழுக்க மில்லாதவன்?

வீரைய :-உயிர் நடைப் பிணம்.

வஜ்ரம் :- புகழ வேண்டியது?

வீரைய :-ஏழைக்கிரங்குதல்.

வஜ்ரம் :- எந்த நாட்டிலும் சமுதாயத்தைச் சீர்திருத்து பவர்களை?

வீரைய :-சமுதாயம் வெறுக்கும் அல்லது கொலை செய் யும்...

வஜ்ரம் :- ஆஹா ! கண்ணே... உன் அறிவே அறிவு...

வஜ்ரம் :- போக்க வேண்டியது ?

வீரைய ;- அறியாமை, நோய், வறுமை !

வஜ்ரம் :- ஆமாம் ...உனக்கு வாள் யுக்தம் செய்யத் தெரியாதாமே...அப்படியா வீரையா...?

வீரைய :- யார் சொன்னது அப்படி ?

வஜ்ரம் :- யதார்த்தம் சொல்கிறாரே உனக்குக் கத்தி பிடிக்கக்கூடத் தெரியாது என்று.... நிஜமா.... ?

வீரைய ;- பார்க்கலாமா ? யதார்த்தம் ! எடு வாளை .... வஜ்ரம்... நீ தூரத்திலே நின்று வேடிக்கை பார் யார் ஜெயிக்கிறார்களென்று...

(யதார்த்தத்தைக் கீழே தள்ளி மேலே உட்கார்ந்து கொள்கிறான்)

வஜ்ரம் :- ராஜாதான் ஜெயித்தான் ! நீ ஒரு சோக்காள் ... உனக்குச் சண்டை போடத் தெரியுமா ? சாப்பிடத்தானே தெரியும்... கைக்கும்... வாய்க்கும் நல்லா சண்டை போடுவாய்

யதார்த் :- போடி இன்னொரு தடவை பாருடி ! (இருவரும் கத்தியோடு கத்தி மோத நிற்கின்றனர்)

(திரை விழுந்து எழுகிறது... ... அதே தோற்றத்தில்....... பதினெட்டு வயது நிரம்பிய வீரையன் யாதார்த்தத்துடன் கத்தியோடு கத்தி மோத முன்போலவே நிற்கின்றனன்.)

வஜ்ரம் :- வீரையா ! நேரமாச்சே...வாருங்கள் இரண்டு பேரும் சாப்பிடலாம்.

வீரைய :- யதார்த்தம் ! திரும்பியும் சின்னவெலிப் பாளையக்காரன் சின்னையன் நம் பாளையத்தின் மீது படையெடுக்கப் போகிறான் என்று சொல்லுகிறாய் ? என் உடம்பில் ஒரு துளி ரத்தம் இருக்

கும் வரை நம் பாளையத்தை வெல்ல பகைவன் இருக்கிறானா ?

யதார்த் :- கார்பி... இன்றோடு உனக்குப் பதினெட்டு வயது நிரம்புகிறது.. நாளைக்குப் பாஞ்சாலங்குறிச்சிக்குப் போய் வா! ராஜா சொல்லியனுப்பி இருக்கிறார்! நாளைக்கு உனக்குத் தானைப் பட்டம் கட்ட வேண்டுமென்று உத்தேசித்து இருக்கிறார்... போய் வாடா கண்ணே !

வீரைய :- அம்மா! இன்றே போய் வருகிறேன்! அன்னையினும் பரிந்து ஆதரித்த அம்மையே! தங்கையிலும் என்னிடம் தயையுள்ள அண்ணையே! என்னை வளர்க்க உங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்....

வஜ்ரம் :- மகனே! பாளையத்தின் பழம் பெருமையை நிலை நாட்டினால் அது தான் நீ எங்களுக்குச் செய்யும் கைம்மாறு... நீ செய்யவேண்டிய வேலை எவ்வளவோ இருக்கிறது; சந்தர்ப்பம் வரும்போது சொல்கிறேன் ...

வீரைய :- அம்மா... இப்பொழுதாவது சொல்லுங்கள் என் தாய் தந்தையர் யார் என்பதை... என் அதை மட்டும் கேட்கும் போதெல்லாம் மறைக்கிறீர்கள்? ஏன் சொல்லவே மாட்டேன் என்கிறீர்கள் !?

யதார்த் :- ஐயோ! அதை மட்டும் கேட்டு விடாதே தம்பி! எல்லோரும் காரியார்த்தமாகத்தான் மறைத்து வைத்திருக்கிறோம்.... காலம் வரும் போது அன்றைக்குப் பூரா விவரமும் சொல்கிறோம் அதற்குள்ளே அவசரப் படாதேயப்பா...!

வஜ்ரம் :- வீரையா! ஆமாம்...! அதுவரையில் பொறுத்துக்கொள் அப்பா!

வீரைய :-எதைக் கேட்டாலும் இப்படியே மறைக்கிறாயே ... இப்போதாவது சொல்.... உன் கழுத்தைச் சுற்றி என்ன இவ்வளவு காயத்தழும்புகள்?

வஜ்ரம் :- போ! ஆரம்பித்து விட்டாயா? அது கண்டமாலை என்ற நோய் வந்து படாதபாடு பட்டேன்... அந்தத் தழும்புகள்... வேறொன்றும் இல்லையப்பா? அதென்ன என் சொல்லில் அவ்வளவு அவநம்பிக்கை உனக்கு?

யதார்த் :- வீரையா...! உனக்கு உண்மையெல்லாம் தெரிவிக்க வேண்டிய காலம் வரும் அப்போது ஆதியோடு அந்தமாய்ச் சொல்ல வேண்டியவற்றை விவரமாகச் சொல்கிறோம்.... பொறு மகனே!

வீரைய :- சரி! தங்கள் வார்த்தையைச் சிரமேல் ஏற்றுக் கொள்கிறேன்... நாளை பாஞ்சாலங்குறிச்சி சென்று அதன்பின் சிலகாலம் மற்றப் பாளையங்களுக்குச் சென்று மாறுவேடத்துடன் உளவு அறிந்து வருகிறேன்... சின்னையனை ஆதரிக்கிறார்களா அல்லது நம் பாளையத்தை ஆதரிக்கிறார்களாவென அறிந்து வரத்தான் செல்கிறேன் .... எனக்கு ... ஆசியளியுங்கள்.

வஜ்ரம் :- அப்படியானால் போய்வா மகனே! இந்தப் பன்னிரண்டு வருஷங்களாகப் பிரிந்தறியாத நாங்கள் ... உன்னை விட்டு எப்படிப் பிரிந்திருப்போம்.

யதார்த் :-வீரையா! உன்னை விட்டுவிட்டு எப்படி இருப்போம் நாங்கள்?!

வீரைய :- வருந்தாதீர்கள் விரைவிலே வந்து விடுகிறேன்.

வஜ்ரம் :- (ஆலாத்தி பொட்டிட்டு) உலகம்மன் உனக்குத்

துணை புரிவாள்.... அவள் இருக்கும் வரை அணுவும் அஞ்சவேண்டாம்.... போய் வா!

வீரைய :- ஐயா! அழவேண்டாம்... சீக்கிரம் வந்து விடுவேன்!

வஜ்ரம் :- (அழுது கொண்டே) பிள்ளை போகும் போது என் அபசகுனம் போல அழுகிறாய்?

யதார்த் :- நீயும் தானே பின்னே அழுகிறே!

வீரைய :- (கீழே விழுந்து வணங்குகிறான்)

வஜ்ரம் :- அப்பா! எங்களைக்கும்பிடலாமா... உன் அந்தஸ்தென்ன!! நாங்கள் வேலைக்காரர்கள் அல்லவா!!!

வீரைய :- எது அந்தஸ்து! பணமும் பட்டமுமா அந்தஸ்து!! சூது வாதற்ற உள்ளங்களை விடவா பணத்திமிரும் பட்டம் பதவியும் பெரிது!!! எனக்கு நீங்களே அன்னையும் பிதாவும்... உங்களைவிட எனக்கு வேறு தெய்வம் கோயிலிலா இருக்கிறது?? நல்ல காரியத்தை உத்தேசித்தே செல்கிறேன்... நாட்டின் நன்மையை நாடியே சுற்றுப்பிரயாணம் செய்யப் போகிறேன்! நம் அரசரும் அவசியம் அனுமதி தருவார் என் விருப்பத்துக்கு! என்னை ஆசீர்வதியுங்கள்.

வஜ்ரம் :- போய் வா மகனே!

யதார்த் :-(முகத்தைத் திருப்பிக் கொண்டு) போய் வா தம்பி!

## ஒன்பதாம் காட்சி

இடம் :- சின்னவேலிப் பாளையக்காரன் அரண்மனை

காலம் :- பகல்

உறுப்பினர் :- சின்னையன், கறுத்தையா, வெள்ளையன், புதிய மராட்டிய சேனாதி

பகி(பழைய தாணைப் பிள்ளை), மல்லர்கள், இந்துமதி-(சின்னையனின் செல்வப் புதல்வி)

சின்னைய:-என்ன கறுத்தையா! பாளையக்காரர்களில் பாதிப் பேருக்கு மேல் நம்மைத்தான் ஆதரிக்கிறார்கள்! ஆதலால் பாஞ்சாலங்குறிச்சியை வென்ற மாதிரிதான்.... என்ன சொல்கிறாய்!

கறுத்தை-ஆம் எஜமான்... அதற்குச் சந்தேகமா பின்னே இருந்தாலும் மரகதக் கல் அந்தப் பாளையத்துக்குள்ளே இருக்கிற வரைக்கும் அந்த மண்ணைப் பணிய வைக்க முடியாது தான்.... நாமும் பல தடவை படையெடுத்துப் பார்க்காச்சே!

வெள்ளை:-நிஜந்தானே! அந்தத் தாணைப் பிள்ளை ஓடிப் போயும் ஒரு மாமாங்கம் ஆகப்போகிறதே.... அப்படியிருந்தும் போன படையெல்லாம் புறங்காட்டி ஓடி வந்து விடுகின்றனவே... எல்லாம் அந்த மரகதக் கல்லின் வாசிதான்! ஆமா?.... அந்த தாணைப் பிள்ளை கதி என்னதான் ஆச்சுதாம்... புலி அடித்தது வாஸ்தவமா?.... அல்லது காசி வைரமணியைக் கூட்டிக் கொண்டு வடநாடு போனது வாஸ்தவமா?? இந்த உண்மையைக் கண்டு பிடிக்க முடியவில்லையே இன்னும் நம்மாலே!

சின்னைய:-போன தாணைப் பிள்ளையைப் பற்றி பேசுவானேன்... தாணைப் பிள்ளை மகனைத் தாணைபதி ஆக ஆக்கி யிருக்கிறானாம் பாஞ்சாலங்குறிச்சி ராஜா!

வெள்ளை :-அப்படியா உங்களுக்கு எப்படித் தெரியும் அதற்குள்ளே!

சின்னைய :-நம்ம புதிய மராட்டிய சேனாபதி இருக்கிறார்

அல்லவா... அவர் எவ்வளவோ விஷயங்களை அறிந்து வருகிறார் தினமும்! இந்தத் தடவை படையை அவர் தலைமையிலேயே நடத்திச் செல்ல வேண்டுமென்று நினைக்கிறேன்! நீ என்ன நினைக்கிறாய் வெள்ளையா.

வெள்ளை:- ஆமா எஜமான்! இவ்வளவு திறமைசாலியைப் பார்த்தகில்லை நான்... யார் அது?

சின்னை :- இந்துமதியா .... எங்கேடா கண்ணு இவ்வளவு நேரம் போயிருந்தாய்! இந்துமதி! உட்கார் அம்மா! இசைப் பயிற்சி முடிந்ததா இன்றைக்கு? இப்போது தான் உன் தோழியை அனுப்பினேன் உன்னைக் கூட்டி வரும்படி.... நீயே வந்தாயா அல்லது உன் தோழி சொன்னாளா?

இந்துமதி-என் அப்பா? ஏதாவது விசேஷமா?

சின்னைய:- யாரோ ஒரு மல்லன் வந்திருக்கிறானாம்.... வடநாட்டுக்காரனாம்... நம்ம சமஸ்தானத்து மல்லனுக்கும் அவனுக்கும் போட்டி நடக்கப் போகிறது.... இப்போது! அந்த வேடிக்கையைப் பார்க்க வேண்டுமென்று தான் உன்னைக் கூப்பிட்டேன்... மல்லர்களை அழைக்கத்தான் நம் மராட்டிய சேனாதிபதி போயிருக்கிறார்...

வெள்ளை:- என் எஜமான்! புதிதாக வந்த அந்த சேனாதிபதியிடம் நம் சேனை பூராவும் ஒப்படைக்கவா .... யோசித்துச் செய்யுங்கள்.... அவன் திறமைசாலியாக இருக்கலாம் ஆனால் உண்மையானவனா என்பதையும் அறிந்து செய்யுங்கள்... உங்களுக்குத் தெரியாததா?

கருத்தை:-பரம்பரையாகப் பாளையத்துக்குத் தொண்டு செய்யும் உள்ளூரானை விட எங்கிருந்தோ நேற்று வந்தவன், உங்களுக்கு நம்பிக்கையாளனாய்

விட்டான்... எனக்குத்... தலைமைப் பதவி போகிறதே என்பதற்குச் சொல்லவில்லை... உங்கள் இஷ்டம்!

இந்துமதி-என் அப்பா! திரும்பியும் பாஞ்சாலங்குறிச்சி மேல் பகைமைதானா?

சின்னையா:-ஆம் அந்தப் பாளையத்தை அழித்தால் அல்லாமல் எனக்கு நிம்மதி ஏது?

இந்துமதி-என் அப்பா! அந்தப் பாளையத்தின் மேல் அவ்வளவு வெறுப்பு உங்களுக்கு! எப்பொழுது பாஞ்சாலங்குறிச்சிப் பேரைக் கேட்டாலும் பதை பதைக்கிறீர்களே! என்?

சின்னையா:-அப்பாளையத்தை பணியவைக்க முடியாதென்று மார் தட்டுகிறான் அவன்.... யாருக்கும் கப்பம் கட்டியறியாத ஜாதியாம் அவர்கள்... அவர்கள் ஆளப்பிறந்த ஜாதியாம் ஆளப்படும் ஜாதியல்லவாம்.... இப்படியெல்லாம் பேச எவ்வளவு துணிவு இருக்க வேண்டும் பாரேன்.

இந்துமதி-என் அப்பா! அப்படிப்பட்ட ஜாதியைக் கண்டு நீங்கள் பெருமையல்லவோ கொள்ள வேண்டும்! அடிமைப் புத்தி மிகுந்த இந்தக் காலத்தில்கூட அப்படி ஆவேசமுள்ள ஜாதியிருக்கிறதா இந்தத் தமிழ் நாட்டிலே! அப்பா! நம் சகோதரனை நாமே காட்டிக்கொடுப்பதா? (புதிய சேனைதி பதி வந்தமர்கிறார்) பங்காளிப் பாளையத்தான் பகையாளி ஆவானா? அப்படி ஒரு பாளையமாவது பழுதாகாமல் இருக்கட்டும். நம் பண்டையப் பெருமையின் அறிகுறியாக பாஞ்சாலங்குறிச்சியாவது மீதமாயிருக்கட்டும் அப்பா!

சின்னையா:-இந்துமதி! அந்தப் பாளைய மக்களுக்கு நம் பேர் சொன்னாலே ஏளனமாக இருக்கிறதாமே!

அதற்காவது பழி வாங்க வேண்டாமா அவர்களை !

இந்துமதி-எனக்கே ஏளனமாகப் படுகிறது ! அவர்களைச் சொல்வானேன் !

சின்னைய:-இந்துமதி ! மகளே !! நீயா அப்படிச் சொல்கிறாய்.... நீ கும்பனிக்காரனைத் தானே சொல்கிறாய்... நம் உதவிக்காக அல்லவோ ...அவன் காத்துக்கிடக்கிறான்....

இந்துமதி-அப்பா ! புலி பதுங்குவதெல்லாம் பாய்வதற்கே யல்லவா.... பாஞ்சாலங்குறிச்சியை நீங்கள் ஜயித்ததும்...நம் பாளையத்தைத் தாக்க தயாரா இருப்பான் வெள்ளையன்.... வெள்ளைக்காரனின் வேலையே அப்படித்தான்.... இதென்ன சொல்லியா தெரிய வேண்டும்... தினம் நடப்பதைத் தான் கண் கூடாகக் கண்டு வருகிறோமே...!

மரா-சேனு-ஆம் எஜமான் ! (மறதியாக)

சின்னைய :-என்ன.... ஆம்.... என்கிறீர் நீரும்...

மரா-சேனு-இதைச் சொல்ல வில்லை ......மல்லர்கள் வெளியிலே உத்திரவுக்காகக் காத்திருக்கிறார்கள் .... அதைச் சொல்ல வந்தேன் !

சின்னைய :-வரச்சொல்லும் அவர்களை... மகளே ! நீ சிறு பிள்ளை உனக்கு அரசாங்க விவகாரம் என்ன தெரியும் !.... இந்த மற்போர் வேடிக்கையைப் பார்.

மராட்டி :-இதோ வந்து விட்டார்கள்... இவன் தான் போட்டியிட வந்த மல்லன் !

சின்னைய :-மல்லனே ! நீ எந்தவூர் ! என்ன வகுப்பைச் சேர்ந்தவன் ?

மல்லன் போல் வந்துள்ள விரையன்:- எந்த ஊர் ! என்ன

வகுப்பு !!... நல்ல கேள்விகள் !!! எனக்கு யாதும் ஊரே யாவரும் கேளிர்....

இந்துமதி-ஆஹா ... நல்ல பதில் ! அது தானே தமிழர் கொள்கையும் !

சின்னைய :-மெத்தப் பேசுகிருன்...கற்ற வித்தையைக் காரியத்தில் காட்டு ...

வீரைய:- ஆஹா அப்படியே ! வரட்டும் உங்கள் சமஸ்தானத்து மல்லன் !

(சமஸ்தானத்து மல்லன் பாளையக்காரனை வணங்குகிருன்)

கருத்தை:-மல்லனே.... சமுகத்தை வணங்கிய பின் தான் மற்போர் தொடங்க வேண்டும் ! இந்த சமஸ்தானத்தின் வழக்கம் அது தான்....

வீரைய :-ஆனல் என் வழக்கம் யாரையும் வணங்குவதில்லை என்பது தான்....

எல்லோரும் :- ஹா....!!!!

வீரைய :- இறைவனையன்றி யாரையும் வணங்கியறியேன் !

சின்னைய : என்ன துடுக்காகப் பேசுகிருய் . இளமை பயமறியாது... ஜாக்கிரதை !

இந்துமதி-அப்பா ! அவன் அப்படிக் குற்றமாக ஒன்றும் சொல்ல வில்லையே !

சின்னைய;-மகளே ! நீ சும்மா இரு ! உனக்கென்ன தெரியும்... மல்லனே... நீயென்ன பெரிய வணங்காமுடி மன்னனு ?.... ஒரு மல்லனுக்கு இவ்வளவு துணிவா.... ?

வீரைய :- என்னைத் தோற்கடித்தாலல்லது... இந்த சமஸ்தானத்துக்கு வணங்கமாட்டேன்....

இந்துமதி-ஆம் அதுவும் நியாயம் தான்.

சின்னைய:-எதுவும் நியாயம் ???

கறுத்தை-ஆம் எஜமான்! மல்லர்கள் கொள்கைக்கு இடம் கொடுக்கவேண்டுவது நியாயம் தான்....!

சின்னைய:-அப்படியா! என்ன வெள்ளையா? என்ன சொல்லுகிறுய்?

வெள்ளை:-ஆமாம்! நம் மல்லன் வெற்றி பெற்றுல் தானுகப் பணிகிருன் இவன்... அவ்வளவுதானே!

சின்னைய:-சரி ஆரம்பியுங்கள்... என்ன நீர் உம் அபிப் பிராயத்தைச் சொல்லவே இல்லையே!

மாட்டி:-இவனைப் பார்த்ததிலிருந்து ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை...அவன் விருப்பம் போல் தான் விடுங்களேன்....

சின்னைய:-(கோபத்தோடு) அவன் விருப்பம் போல் விடுவ தானுல் எனக்கென்ன மரியாதை இருக்கிறது... இந்தச் சபையிலே!

மாட்டி:-எஜமான்! கலைஞர்களுக்குரிய உரிமை தான் அது.... பணயம் கூறவேண்டியது முதலில் அவன் தான்.... பதில் பணயம் வேண்டுமானுல் நீங்கள் விதிக்கலாம்...

சின்னைய:-மல்லனே! நீ தோற்றுல் என்னை வணங்க வேண்டியதில்லை... நான் கூறும் பணயத்துக்குக் கட்டுப்பட வேண்டும்...சம்மதம் தானே!

வீரைய:-அப்படி வாருங்கள்! தாராளமாகச் சொல்லுங் கள்... உங்கள் பணயம் எதுவானுலும் சம் மதமே!

சின்னைய:- நீ தோற்றுல்...

வீரைய - அது நடவாத காரியம்.... உம்.... மேலே சொல் லுங்கள்...!

சின்னை :- நீ தோற்றுல் .. உன்னை நாயைச் சங்கிலியால் கட்டுவதுபோல கழுத்தில் சங்கிலியிட்டு என்

மாளிகை வாசல் தூணில் கட்டிப்போடுவேன்.... சம்மதமா...!

வீரைய :- முடிந்தால் பாருங்கள்! பணயத்துக்குச்சம்ம தந்தான்.... ஆரம்பிக்கலாமா?

(மும்மரமாக நடக்கிறது... கடைசியில் சமஸ்தானத்து மல்லன் தோற்றுப் போகிறான்)

இந்துமதி-சபாஷ்!

சின்னே :- (சினத்தோடு) இந்துமதி!

மாட்டி :- ஆஹா! பேஷ்!!

சின்னே :- சேனாதிபதி!!!

கறுத்தை-புது மல்லன்தான் வெற்றிபெற்றான்!

சின்னே :- மல்லனே! ஜயித்துவிட்டானே! (பெருமூச்சு விடுகிறான்) உம்.... உனக்கென்ன வேண்டும்?

வீரைய :- உங்கள் ஆசிவேண்டும் வேறொன்றும் வேண்டுவதில்லை!

சின்னே :- கறுத்தையா! பொன்னும் மணியும் கொண்டு வரச்சொல்.

வீரைய :- பொன்னும் மணியும் எனக்கு எதற்கு... அவற்றைத்துச்சமாக மதிக்கிறேன்... இரண்டொரு நாள் இந்தப்பாளையத்தைச் சுற்றிப்பார்க்க பட்டும் அனுமதி கொடுத்தால் போதும்!

சின்னே :- அப்படியே செய்...அது வரை அரண்மனை விருந்தினனாய் இருந்துபோ...!

## பத்தாம் காட்சி

இடம் :- சின்னவேலிப்பாளையத்து அரண்மனை நந்தவனம்.

காலம் :- மாலை

உறுப்பினர் :- வீரையன், அரண்மனை, வேலையாள், இந்துமதி, வைரமணி.

வீரைய :- அவள் அவன் மகளாகத்தான் இருக்கவேண்டும்... ஆஹா... அழகும் அறிவும்... ஒன்று சேர்வதில்லை என்பார்களே.... ஆனல் அறிவுச் சுடரும்.. அழகொளியும் சேர்ந்த உருவமாயல்லவோ அவள் இருந்தாள்! அவளை அடிக்கடி என்னவோ பெயரிட்டு அழைத்தானே அவள் தந்தை... ஆம்... இந்துமதி என்றுதான் சொன்னன்.... எனக்காக எவ்வளவு பரிந்து பேசினள்!!... யாரோ வருகிருனே.... யார் நீ?

வேலையா:- என்னையா நீ! நல்ல ஆளாயிருக்கிருயே! நேற்று நீ மல்யுத்தம் செய்த இடத்திலே இந்த வீர கண்டையை வைத்துவிட்டு வந்து விட்டாயாமே.... இதைக்கொண்டுவந்து கொடுப்பதற்கு உனக்கு ஒரு ஆளா...? என்னமோ இந்துமதியம்மா சொன்னங்களே என்று கொண்டு வந்தேன்...இல்லா விட்டால் உனக்காகக் கொண்டு வருவேனு?

வீரைய :- என்ன! வீரகண்டையா!! யாருடையது!!??

வேலையா:- நீ சரியான ஆளப்பா? இதென்ன பூலோகமா .... நீங்களெல்லாம் மனுஷாளா... அப்படின்னு கூடக்கேட்பாய்இன்னும்கொஞ்சம்நேரத்திலே

வீரைய :- கோபித்துக்கொள்ளாதே! என்ன சொல்கிருய் பார்க்கலாம் என்றுதான் பார்த்தேன்... அதற்குள் கோபித்துக்கொள்ளாதே... அப்புறம் இந்துமதி வேறே ஒன்றும் சொல்ல வில்லையா?

வேலையா:- சரியான.... வேலைக்கா.... ர ... மனிதன் நெரிஞ்சுகிட்டுதான் கேட்கிருய்!

வீரைய :- என்ன சொன்னள்?

வேலையா:- அதைச் சொல்ல மறந்து விட்டேனே.... இந்த

நந்தவனம் மாலைநேரத்திலே ரொம்ப நல்லா யிருக்கும் என்று சொல்லச்சொன்னார்கள் ....

வீரைய:- அப்படித்தான் இருக்கிறது என்று சொல்... (போகிறான்) நேற்றுக் கண்ணால் பேசியதுபோல் இன்று குறிப்பால் உணர்த்துகிறாளா...? அம்மையே உலகநாயகி!.... என்ன! சோதனையா? ஜன்மப்பகையாளியின் மகள் மீதா பாசங் கொள்ளச்செய்கிறாய்... இவளை மறந்து விடுவதே மேல்... ஆம் அதுதான் சரி.... வேறு வழியில்லை... இவளையடைய எங்ஙனம் இயலும் மறக்கமுயன்றாலும் முடியவில்லையே... இந்த நந்தவனம் இந்த மாலை நேரத்தில் நன்றாயிருக்குமாம்.... அஹா.... இப்பொழுது இங்கே இருக்கச்சொல்கிறாளா...எவ்வளவு இரத்தினச்சுருக்கமாகச் சொல்கிறாள் .... பெண்ணுக்குரிய சாதுர்யமும்.... சமயத்துக்கேற்ற அறிவும் ஆண் மகனுக்கு வருமா....?

இந்துமதி :- (மறைந்திருந்து .... வருகிறாள்) என் வராது அது அறிந்து தானே தாமதித்திருக்கிறீர்கள்...

வீரைய :- பெண்ணே!

இந்து :- என்?

வீரைய :- பெண்ணே! உன்னிடம் என்ன பேசுவதென்று தோன்றவில்லை! வாய்ச்சொல் ஏது பயனும் இல்லைதான்.

இந்து :- ஆஹா... நேற்று மற்போர் புரிந்து...

வீரைய :- 'மணப்போரை உண்டாக்கிவிட்டேன்' என்கிறாயா.... போர் என்றால் இருபுறமும்தானே போர்புரிந்தாகவேண்டும்... இந்துமதி.... மதிக்கேனும் மறு உண்டு... உனக்கு அதுவும் இல்லை. என் ஆசையெல்லாம் அள்ளிக்கொட்ட ஆற்றல்

இல்லை எனக்கு!.... ஐயோ! கவிஞனைப்பிறந்தேனில்லையே... உன்னழகைக் காவியத்தில் எழுத! ஓவியத்தில் எழுதி மகிழ கலைவல்லவனையும் இல்லையே...

இந்து :- போதும் அப்படியெல்லாம்பேசாதீர்கள். நேற்று உங்களைக்கண்டதுமுதல்...

வீரைய :- உம் நானுந்தான் பைத்தியக்காரனாய் அலைகிறேன்... இன்று விடிந்ததிலிருந்து...

இந்து :- எனக்கும் உணவைப்பற்றியே.... உணர்வில்லை உங்களை மனக்கண்ணுல்கண்டு ஆனந்திப்பதிலேயே.... பொழுது சரியாயிருந்தது...!

வீரைய :- இப்போது... நான் இங்கிருப்பதாக எப்படித்தெரியும் உனக்கு??!

இந்து :- இதென்ன இப்படிக்கேட்கிறீர்கள் .... மனத்துக்கு வேகம் மட்டும்தான் உண்டு என்று எண்ணுகிறீர்களா? அஞ்சல் செய்யும் ஆற்றலும் உண்டே .... இருமனமும் ஒரேசமயத்தில் நினைத்தால் நம்மையும் அறியாமல் எண்ணங்கள் இரண்டறக்கலக்குமே!

வீரைய :- ஆஹா! இவ்வளவு இன்பமொழிகளைக் கேட்டதே இல்லை இதுநாள்வரை... யாரையும் ஏறிட்டும் பாராத வீரையன் எந்த மங்கையிடமும் பேசியறியான்.... ஆஹா.... உன் சொல் ஜாலம் நிறைந்து வழிகிறதே... அன்பும் ஆசையும் நிறைந்து பொங்கும் என்பதை இப்போதுதான் உணர்கிறேன்...உண்மையில்.... என்னை நீ விரும்புகிறாயா...?

இந்து :- எவ்வளவு நன்றாய்க்கேட்கிறீர்கள்!!.. கற்கண்டு இனிக்கிறதா என்கிறீர்களே...! உங்கள் கேள்வியே என் மனத்தைக்கலக்குகிறது...!

வீரைய :- ஆம்... பெண் ஒருகாய் பூப்போன்றது.... அதனுடன் விளையாடக் கூடாதென்பது தெரியும் எனக்கு. இருந்தாலும் கேட்க வேண்டுமே யென்று தான் கேட்கிறேன்... அப்படிப்பட்ட அவஸ்தையில் அகப்பட்டிருக்கிறேன் .... சரி நான் யாராயிருந்தாலும் என்னை மணப்பாயா?

இந்து :- ஐயா! அதிலும் சந்தேகமா....என் நிலை சொல்லவில்லையா... உங்களுக்கு...! சொல்லாலும் சொல்லவேண்டுமா அதை?

வீரைய :- இந்துமதி! நம் இருவர் அன்பும் ஒன்றுபடாத அன்பாக ஆகிவிடுமோ என்று அஞ்சுகிறேன்.... அதை நினைக்கக்கூட மனம் தாங்கவில்லை... நான் யார் என்பது தெரியுமா உனக்கு?

இந்து :- தெரியும், என் தெய்வம் நீர்!

வீரைய :- ஐயோ எவ்வளவு அன்புகொண்டிருக்கிறாய்! நான் யார் மகன் என்பது தெரியுமா?

இந்து :- நான் முப்பிறப்பில் செய்த புண்ணியமே உருவான அண்ணலின் புதல்வன்.

வீரைய :- கண்ணே! அழகாகச் சொல்கிறாய்... என்மேல் உள்ள அன்பு உன்னை அழகுபடச் சொல்லச் செய்கிறது... நான் யார் என்பது உண்மையில் எனக்கே தெரியாது.... அனால் ஒன்றுமட்டும் தெரியும் .. பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்துக்கு க்காதிபதியாய் நான்கு நாளைக்கு முன்தான் பட்டங்கட்டியிருக்கிறார்கள்.... எனக்கு

இந்து :- ஆஹா! நான் கொடுத்துவைத்தவள்!

வீரைய :- இந்துமதி!.... எப்படிச் சொல்கிறாய்?'

இந்து :- நீங்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியாவிட்டாலும்.... எனக்குத்தெரியும் பழைய

தானுதிப்பிள்ளையின் தனிப்புதல்வன் நீர்... ஆஹா... என்ன புண்ணியம் செய்தேனே?

வீரைய :- கண்ணே! உண்மையா...! எனக்கு மயிர்க் கூர்ச்செரிகிறது... ஆனாலும் உன் தந்தை பாஞ் சாலங்குறிச்சியின்மேல் பகைமை கொண்டுள் ளாரே!

இந்து :- நாட்டுக்குப் பழிதேடுபவர்.... எல்லோர்க்கும் பகைவர்தான்... மண் ஆசை மயங்கவைக்கிறது அவரை. தனிப்பட்டவர் பகையால் தமிழ்நாட் டுக்கே கேடு விளைவிப்பதா.... அநியாயம் செய் பவர் யாரானுல் என்ன? யார் அ....து? யாரோ ஒரு பெண்துறவி வருகிறுர்!

வீரைய :- அம்மையே! கலங்கித்தவிக்கும் இக்கன்னிக்கும் காளைக்கும் ஆசி கூறுங்கள் அம்மையே!

வைரம :- குழந்தைகளே! உங்களுக்கு எப்போதும் வெ ற்றி கிடைக்கும்... உலகம்மன் உங்களுக்கு எப் போதும் துணைநிற்பாள்.

வீரைய :- உலகம்மனு......? அம்மையே என் குலதெய் வம் அம்மையே!

வைரம :- அப்பா! நீ வீரையனு அப்படியானுல்....?? இங்கு ஏன்வந்தாய்? மகனே உன்னுல் அல்ல வோ பாஞ்சாலங்குறிச்சிக்கு விமோசனம் ஏற் படப்போகிறது.... நாட்டின் மானத்தைக் காத் தால்தான் இறந்த உன் அன்னையின் ஆத்மா சாந்தியடையும்... நீ மகத்தான காரியத்தைச் செய்யப்போகிறுய்.... அக்காரியம் நிறைவேறும் வரை மங்கைபால் மையல் கொள்ளாதே.... ஜாக்கிரதை... இப்போதே புறப்படு.

வீரைய :- அம்மையே! உன்வாக்கை தேவ வாக்காக சிர மேற்கொள்ளுகிறேன்....அடடா நான் வந்தகா

ரியத்தை மறந்துவிட்டேனே! அம்மையே.... வரும் வாரம் இப்பாளையக்காரன் படையெடுத்துவரப்போகிறானும் பாஞ்சாலங்குறிச்சியின் மேல்...

வைரம :- மகனே! வீரத்தோடு நாட்டைக்காப்பாற்று... இல்லையேல் இறந்துபடு... கோழை பலதடவை சாகிறான்.... வீரனுக்குச்சாவு ஒரேதடவை.... சாவுபெரிதல்ல .. நாட்டின் உரிமையே பெரிது .... தெரிகிறதா!!!

இந்து :- ஐயா! நானும் வருகிறேன்!

வீரைய :- பெண்ணே! போரின் முடிவுதெரிந்து வெற்றி பெற்று நான் உயிரோடிருந்தால் ...வா....உன்னை எப்படியும் ஏற்றுக்கொள்வேன் ...அம்மன் மீது ஆணை!

வைரம :- மகனே! மரகதக் கற்களை ஜாக்கிரதையாகப் பத்திரப் படுத்து... வஜ்ரத்திடம் கேட்டுத் தெரிந்து கொள்.... எங்கிருக்கிறதென்று! ... கற்களை... இழந்தால்... கண்களை இழந்தாற் போல்தான்...ஜாக்கிரதை... முடியுமானால் நானும் அதற்குள் வந்து சேர்வேன் ..!

வீரைய :-அம்மையே! என்னுடன் வாருங்களேன்.... துணையாக உடன் வருகிறேன்!

வைரமணி-துறவிக்கு ஒரு துணை வேண்டுமா?

இந்துமதி-படையுடன் வேடிக்கை பார்க்க வருவதாகச் சொல்லி நானும் வருகிறேன்!

வீரைய :- அப்படியா.... வருகிறாயா கண்ணே!

## பதினோராம் காட்சி

இடம் :- உலகம்மன் கோயில் : அம்மன் பக்கிரகம்

காலம் :- நடுஜாமம்.

உறுப்பினர்:-சின்னையன், மராட்டிய சேனாதிபதி-தானாதிப்பிள்ளை, வீரையன், இந்துமதி, வைரமணி.

(வீரையனைச்சிறைப்படுத்தி தூணில் கட்டிப் போட்டிருக்கிறார்கள்)

சின்னைய :-வீரையா! அகப்பட்டுக் கொண்டாயா ?.... கறுத்தையா இவனை விட்டு விடாதீர்கள்.... இந்தச் சிறுபயல் ஒரு தானாதிபதியா.... இவன் தான் அன்று மல்லனாக வந்தானா? ஓஹோ உளவறிந்து செல்லத்தான் வந்தாயா....சேனாதிபதி... இந்தப் பயலை சித்ரவதை செய்தால் மரகதக் கற்கள் இருக்கும் இடத்தைச் சொல்கிறான்.... நகக்கண்களிலே ஊசியேற்றுங்கள் உண்மையைச் சொல்லிவிடுவான்.... அடிக்கும் அடியில் தானாகக் கக்கி விடுகிறான்...இருக்குமிடத்தை! சேனாதிபதி! அவன் கைகளைச் சங்கிலியால் கட்டும்... (வீரையன் சேனாதிபதியைக் கட்டும் போது எட்டி உதைக்கிறான்) என்ன துணிச்சல் இவனுக்கு! என்ன.... சேனாதிபதி.... உமக்கு ரோஷமில்லை.... சும்மா நிற்கிறீர்!! எட்டி உதைப்பவனைச் சும்மா விடுவதா....?

சேனாதி :-எஜமான்! பதிலுக்கும் உதைத்தால் இறந்து தொலைந்து போவான் என்று தான் சும்மா விட்டேன்... நாயை அடிக்கக் குறுந்தடியா வேண்டும்.. இவனைக்கொல்லுவது பெரிய காரியமா.... அவனிடமிருந்து கிரகிக்கவேண்டியவற்றை கிரகித்தபின்.... தங்கள் ...உத்திரவுப்படி.... அவனை என்னவேண்டுமானாலும் செய்கிறேன்.

சின்னை :- அதுவும் வாஸ்தவம்! டேய்.... மரகதக்கற்கள் எங்கிருக்கின்றன? சொல்! அதைக்கொடுத்து

விட்டால்.... உனக்கே இந்தப்பாளையத்தைப் பட்டங்கட்டிவைத்துவிடுகிறேன்...

வீரைய :- சீ! பதரே! பெரிய வீரனடா நீ! எவ்வளவோ புண்ணியர்களைப் பெற்ற தமிழ்த்தாய் உன்னைப் போன்ற புல்லியனையும் பெற்ருளே வீரர்களைப் பெற்றெடுத்த அன்னை உன்போன்ற வேர்ப்புழுவையும் பெற்ருளே! உரிமை உரிமை என்று உலகம்பூராவும் ஓயாது சொல்லும் நாளிலே உடனிருந்து உலைவைக்கும் உன்னை யேன் பெற்ருள்? அன்னையை மீட்க எல்லாரும் அலறும் இந்நாளிலே இந்த அடிமையை என் பெற்ருள்? தாயைக்கொல்வதுவேறு— தாய் நாட்டைக்கொல்வதுவேரு? மண்ணுக்கு ஆக மாண்டு மடிகிருர்களே மற்றநாட்டிலே! மானத்துக்காக மடிந்தொழிகிருரே மற்றதேசத்திலே... அற்பப்பயலே... அடிமையறிவாஞ ஆண்மைத்திறனை? பேடியறிவாஞ பெரும் போர்முறையை!... உனக்கு மரகதக்கற்களா வேண்டும்.... என் மார்பைப்பிளந்துபார்!... மரகதக்கற்களிருக்கும் உள்ளே!

சின்னை :- சேஞதிபதி விடிவதற்குள்ளே இவனைச்சித்திரவதை செய்து உண்மையைக்கக்கும்படி செய்யும்.... நான் கூடாரத்துக்குப் போகிறேன்... விடிந்ததும் வருகிறேன்... ஜாக்கிரதை! ஏமாந்துவிடாதீர்!

சேஞதி :- என்ன எஜமான்! இதிலெல்லாம் ஏமாறுவேஞ? ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்கிறேன்.... அது என்பொறுப்பு எஜமான்! (சின்னையன் போகிருன்)

(சுற்றுமுற்றும் பார்த்து பின்னும் சென்று பார்க்க சேஞதிபதி செல்கிருர்)

வீரைய :- அம்மையே... உன் நாட்டுக்கு அடிமைத் தனையா... இதென்ன அநீதி!... திருட்டுத்தன மாகவல்லவோ வந்து நுழைந்து என்னைக் கைதியாக்கிவிட்டனர் ... (விலங்கை அறுக்க முயல்கிறான்)

சேனாதி :- (திரும்பிவந்து) அப்பா... வீரையா... ! கஷ்டப் படாதே .... நானே அவிழ்த்து விடுகிறேன் (அவிழ்க்கிறார்)

வீரைய :- சேனாதிபதி! இதுஎன்ன!! என்னையேன் விடுதலை செய்கிறீர்! இதுவும் ஒரு தந்திரமா? (வீரையன் கைகளைக்கண்களில் ஒற்றிக்கொள் கிறார்)

சேனாதி :- வீரையா உனக்கு விடுதலை அளிக்கிறேன் இப் போதே! ஓடிவிடு சீக்கிரம்

வீரைய :- பயந்து ஓடிவிடுவதற்கு நான் கோழையல்ல ஒருகாலும் ஓடமாட்டேன் நேருக்குநேர் போர்புரிந்து இறப்பேனேயொழிய பயந்து ஓடமாட்டேன் நான் தாணுதிப்பிள்ளை மகன் என்பதை அறிந்துபேசும்.

சேனாதி :- வீரையா சின்னவேலிப் பாளையக்காரன் இந்த நாட்டின்மேல் படையெடுத்துவரவில்லை இப் போது! உன்னைக்கைது செய்து கற்களைக் கைப் பற்றத்தான் வந்திருக்கிறான் கற்களைக் கண்டு கொண்டால் பாஞ்சாலங்குறிச்சிக்கு அழிவு காலம் அணுகிவிடும் ... அதுதான் தப்பிப் போகச்சொல்கிறேன்.... உன்னை.

வீரைய :- (வீரையன் கோபத்தோடு வாளையுருவுகிறான்) நீர் யார் .... உண்மையைச்சொல்லும்... இல்லை யேல் இந்த வாளுக்கு இரைதான்.

சேனாதி :- நானா? துரோகிநான்! அன்று அம்மன் கண் களில் அழகாக விளங்கிய கற்களை அடிமைப்

புத்தியால் அபகரித்த பாவிநான்! கற்களைக் காக்கவந்த மாண்புடைய மனைவியைக் கொன்ற மாபாவி நான் .. அடக்கமே உருவான ஆரணங்கு அறிவே உருவான பெண்தெய்வம் இன்றைய அலங்கோலத்தை அன்றே உணர்ந்து ஆவேசம்கொண்டு தடுக்கவந்த உன் அன்னையை ஆராயாமல் கொலைசெய்த சண்டாளன் நான்.... பெண் என்றும் பாராது பேடித்தனத்தால் பெரும்பிழைசெய்த பெரும்பாவிநான் .. இப்படிப்பட்ட பேடி உன்தந்தை என்பதை நீ அறியக்கூடாது என்றுதான் அவள் உயிர் பிரியு முன்பே ஓடிவிடச்சொன்னாள்.... இந்தக்கற்களைக்காப்பதற்காகவே பகைவனிடம் பணியாளாகச் சென்றேன்... வீரமகனே! நீ மட்டும் தப்பிச்செல் (இருவரும்கட்டிக்கொள்கின்றனர்) வீரையா! இப்போதே தப்பிச்சொல்! இதே சங்கிலியால் என்னைக்கட்டிப்போட்டுவிடு! அதனால் வரும்பயனை நான் ஏற்றுக்கொள்கிறேன்.... நான் செய்த பாவத்துக்கு அதுதான் கழுவாய்! ஆஹா! மைந்தனின் ஸ்பரிஸம் இவ்வளவு இன்பமானதா.... மக்கள் மெய்தீண்டல் உடலுக்கு இன்பம்தான்.

சின்னைய:- (மறைந்திருந்து எல்லாவற்றையும் கேட்டு, வெளியேவந்து) துரோகி! பழைய தானாதிப்பிள்ளையா சேனாதிபதியாய் இருந்தாய் என்னிடம்!!! இத்தனைவருஷமாக என்னை ஏமாற்றியல்லவோ வந்திருக்கிறாய்!

சேனாதி:- பேசாதே! பதரே!! எடுவாளை.

வீரைய :- அப்பா! என்னிடம் விட்டுவிடுங்கள் அவனை.

சேனாதி:- வீரையா! அவனை என்னிடமே விட்டுவிடு... உன் தாய்க்குக் கொடுத்தவாக்கை நிறைவேற்றும்

நேரம் வந்துவிட்டது.... தூரநில் மகனே!

ரய :- இதென்ன தண்டனையா?

ஞதி :- இல்லை இருவர் ஒருவனை எதிர்க்கவா? அப்படி அவன் என்னைக்கொல்வானாயின் நான் இறந்த பின் போரிடு! உன் தாயின் இரத்தம் சிந்திய இதே இடத்தில் என் இரத்தமும் சிந்தட்டும் என்மகன் என்பது உண்மையானால் நீ தூரவே நிற்கவேண்டும்!

சின்னைய:- டே! வாய்வார்த்தை பேசாமல் வாளையெடு!

வீரைய :- அப்பா! இதைப்பார்த்துக்கொண்டு நான் சும்மா நிற்கவா?.... என் கையைக்கட்டி விட்டீர்களே!

(வாட்போர் நடக்கிறது.... தானாதிப்பிள்ளையைக்குத் திவிடுகிறான்.... பதிலுக்கு ஒரே குத்தில் சின்னையன் இறந்துவிடுகிறான்.... தானாதிப்பிள்ளை குற்றுயிராய் இரத்தம் வழிய விழுகிறார்)

இந்துமதி, வைரமணி, யதார்த்தம், வஜ்ரம் ஓடி வருகிறார்கள்... ஐயையோ இதென்ன காட்சி

(சேனாதிபதி): தானாதிப் பிள்ளை :- மகனே.... சீக்கிரம் கற்களை எடுக்கச் சொல் வஜ்ரத்தை!

வஜ்ரம் :- கண்ணே! வீரையா! என் கழுத்திலுள்ள தழும்புகளை வாளின் கூரிய பாகத்தால் அறு!

வீரைய :- ஐயோ! மாட்டேன்! ஏன்?

வஜ்ரம் :- கற்கள் அங்குதான் உள்ளன!

வீரைய:- மாட்டேன்! கொஞ்சம் தவறினால்... உன்கதி என்னவது! அன்னையிலும் அன்புடைய அம்மையே....என்னை வளர்த்ததற்கு உன்னைக்கொல்லவா.... மாட்டேன்... யாராவது மருத்துவனைக்கொண்டு லேசாகக்கீறி எடுக்கலாம்-

வஜ்ரம் -: பாஞ்சாலங்குறிச்சி மண்ணைவிடப் பெரியதா என்உயிர்? கொடு இப்படி' மருத்துவன் வருமுன் உன் தந்தை மாண்டுபோவார்! விடு கையை

வீரைய :- வேண்டாம்! அம்மையே!

வஜ்ரம் :- அப்பா! உன் தந்தையின் உயிர்போகுட்டு அவர் கையாலேயே அம்மன் கண்களில் வை கட்டும் இதை. (தானே கழுத்தை அறுத்துக் கற்களை எடுத்துத்தந்து உயிர்விடுகிறுள்)

(வஜ்ரத்தை, யதார்த்தமும் வைரமணியும் எடுத்து மடிமீது கிடத்தி அழுகின்றனர்)

இந்து :- (தன்தகப்பனை மடியில்தூக்கி அணைத்து) ஐயோ ... அப்பா.... உங்களுக்கு இந்தகதியா நேர வேண்டும்! படித்துப்படித்துச் சொன்னேனே ... ஒரு வார்த்தை கேட்டீர்களா....?

தானுதி :- என்னைப்பிடித்துக்கொள்மகனே! என் கையாலேயே அம்மன் கண்களில் வைக்கிறேன்!... வஜ்ரம்! தமிழச்சிகளில் தலைசிறந்தவளே!! எனக்கும் முடிவு நெருங்கிவிட்டது! இப்படி வாம்மா! இந்துமதி! உன் மனத்திலுள்ளதை அறிவேன் மகளே. (வீரையன் இந்துமதி இருவர் கையையும்சேர்க்கிறுர்.

வைரம :- (துறவி) ஐயா.... இந்தச்சண்டாளியால் நேர்ந்தது இதெல்லாம்.

தானுதி :- யார்...? வைரமணி... யா..? நீ யென்னசெய்வாய்! இந்துமதி இனி வீரையனை உன்னிடம் ஒப்படைக்கிறேன்.... யதார்த்தம்...? அழாதே வைரமணி குழந்தைகளுக்கு இனி தாய் தந்தை எல்லாம் நீதான். கழுவேற்றினுலும் நாட்டைக் காட்டிக் கொடாதே! எங்கள் இருவரையும் ஒன்ருகப் புதையுங்கள்.... அதோடு நாட்டின் துரோகச் செயலும் புதைக்கப் படட்டும்... உனக்கேற்றாற்போல் கட்டபொம்மனும் பட்ட மேறியுள்ளான். பாஞ்சாலங்குறிச்சி மண்வாசியை உலகமறியட்டும். அம்மையே.... இதோ வந்து விட்டேன்.

காமராசர் பல்கலைக்க

# அச்சேற்ற இருக்கும் நாட...

1 ஒப்பிலாமணிப்புலவர்
2 சம்யுக்தை
3 முதலாம் சார்லஸ்
4 பிரஞ்சுப்புரட்சி
5 மகரயாழ்
6 கலா நிலையம்
7 ஷண்முகப்பிரியா
8 தர்மசங்கடம்
9 வாழ்க்கைப்படிகள்
10 கிராமத்து ஆசிரியர்
11 சுப்பி அல்லது சுகாதாரம் நாடகம்
12 நந்தினி
13 வள்ளி
14 கர்ணன்
15 நடக்காத பேச்சுக்கள்
காளிதாசன்—சகுந்தலை
இளங்கோவடிகள்—கண்ணகி
வால்மீகி—சீதை

இந்நூல் கிடைக்குமிடம்:-

திருமதி சுந்தரம்மாள்

**இளங்கோ நிலையம்.**

ஆத்தூர்-சேலம்.

---

அச்சகம், ஆத்தூர், சேலம்.